


Petitions from the Pit

படுகுழியிலிருந்து மன்றாட்டுகள்

33 Prayers for Deliverance in Darkness

இருளில் விடுதலைக்கான 33 ஜெபங்கள்

These prayers were born in the long night of the soul— in seasons of hidden tears and unspoken grief, when rejection wore many faces: overqualified yet unwanted, unqualified yet burdened with vision, passed over, misunderstood, cast aside.

They rose from the crucible of countless small deaths— micro-wounds of daily despair, macro-shadows of loss and isolation, emotional tempests, spiritual wilderness, physical darkness that words fail to name.

Yet in the deepest valley, a whisper remained: “Thank You, Father.”

These letters to Heaven were penned not in triumph, but in trembling trust— raw, unpolished, honest before the Throne.

And now, by the mercy of the Father, in the Name of the Lord Jesus Christ, and through the fire of the Holy Spirit, these private cries are released as public light— that any fellow traveler in the shadows might find companionship on the road, and glimpse the dawn that always follows the darkest hour.

May every reader who opens these pages hear the same gentle voice that carried the writer: “You are not alone. I have heard every prayer. The morning comes.”

To the glory of the One God— Father, Son, and Holy Spirit— whose perfect Oneness turned my midnight into song.

Amen.

இந்த ஜெபங்கள் ஆத்துமாவின் நீண்ட இரவில் பிறந்தன— மறைந்த கண்ணீர்களும் பேசப்படாத துயரங்களும் நிறைந்த காலங்களில், நிராகரிப்பு பல முகங்களை அணிந்திருந்தபோது: அதிக தகுதியுடையவனாக இருந்தும் விரும்பப்படாதவன், குறைந்த தகுதியுடையவனாக இருந்தும் பார்வையால் சுமக்கப்பட்டவன், புறக்கணிக்கப்பட்டவன், தவறாகப் புரிந்துகொள்ளப்பட்டவன், ஒதுக்கிவைக்கப்பட்டவன்.

அவை எண்ணற்ற சிறு மரணங்களின் உலையிலிருந்து எழுந்தன— தினசரி துயரத்தின் சிறு காயங்கள், இழப்பு மற்றும் தனிமையின் பெரிய நிழல்கள், உணர்ச்சிக் காற்றழுத்தங்கள், ஆவிக்குரிய பாலைவனங்கள், சொற்களால் விளக்க முடியாத உடல் இருள்.

ஆனால் ஆழ்ந்த பள்ளத்தாக்கிலும், ஒரு முணுமுணுப்பு இருந்தது: “நன்றி, பிதா.”

இந்த சொர்க்கத்திற்கான கடிதங்கள் வெற்றியில் எழுதப்படவில்லை, ஆனால் நடுங்கும் நம்பிக்கையில்— மூலமானவை, பளபளப்பற்றவை, சிங்காசனத்திற்கு முன் நேர்மையானவை.

இப்போது, பிதாவின் இரக்கத்தால், கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தில், பரிசுத்த ஆவியின் தீயால், இந்த தனிப்பட்ட அழுகைகள் பொது ஒளியாக வெளியிடப்படுகின்றன— நிழல்களில் பயணிக்கும் எந்த சக பயணியும் பாதையில் தோழமையைக் காணட்டும், மிக இருண்ட மணிநேரத்திற்குப் பின்னர் எப்போதும் வரும் விடியலைப் பார்க்கட்டும்.

இந்த பக்கங்களைத் திறக்கும் ஒவ்வொரு வாசகனும் எழுத்தாளரைத் தாங்கிய அதே மென்மையான குரலைச் செவிமடுக்கட்டும்: “நீ தனியாக இல்லை. நான் ஒவ்வொரு ஜெபத்தையும் கேட்டேன். காலை வருகிறது.”

ஒரே கடவுளின் மகிமைக்காக— பிதா, மகன், பரிசுத்த ஆவி— அவருடைய சரியான ஒருமை என் நள்ளிரவை பாடலாக மாற்றியது.

ஆமென்.

23-08-09

என் இயேசுவே உம்முடைய பரிசுத்த நாமத்திற்கு மகிமையுண்டாவதாக.
என்னில் உம்முடைய பிரசன்னம் தங்கியிருப்பதற்காக ஸ்தோத்திரம்.
எனக்குள்ளே நீர் மிகப்பெரிய காரியங்களை செய்கிறீர் ஸ்தோத்திரம்.
எந்நாளும் என்னில் வெற்றி சிறக்கப்பண்ணுவதற்காக ஸ்தோத்திரம்.
நன்றி நன்றி என்று என் சர்வ வல்லவரை நான் போற்றுவேன்.
பிதாவின் வலது பாரிசத்தில் வீற்றிருக்கின்ற என் இயேசுவை நமஸ்கரித்திடுவே
அவர் பரிசுத்தர், பரிசுத்தர், பரிசுத்தர் சேனைகளின் தேவன் நல்லவர்.
உம்முடைய எண்ணி முடியாத கிரியைகளை நாள்தோறும் எண்ணி வியக்கிறே
அற்புத அதிசயங்களை நினைத்து நினைத்து உம்மில் நிலைத்து நிற்கின்றேன்
என்னுடைய வியாதிகள் என்னை விட்டு நீங்கிப் போயிற்று.
என்னுடைய துக்கம் என்னை விட்டு விலகியோடிப் போயிற்று.
என் கன்மலையானவராம் நீர் வாழ்க வாழ்க என்று உரைத்திடுவேன்.
தேவனே என் இராஜனே உம்மை துதித்துப் பாடி மகிமைப்படுத்திடுவேன்.
அப்பா பிதாவே, என் அன்பான தேவனே உம்மை வாழ்த்துகின்றேன்.
உம்முடைய இராஜ்யத்தை தேடி தினந்தோறும் வாஞ்சிக்கின்றேன்.
உம்முடைய கிருபையை எண்ணி நாள்தோறும் மகிழ்கின்றேன்.
உம்முடைய நீதியை விரும்புகிறேன். உம் ஞானத்தைக் கண்டு வியக்கிறே
உம்முடைய ஞானம் மெய்யாகவே மிகவும் பெரியது. அது அளவில்லாதது
இறைவா மெய்ஞானம் உமதே. உம்மை அறிவதே ஞானம்.
தேவனே எனக்கு நீர் எத்தனை நன்மைகளை செய்திருக்கிறீர். நன்றி
பாவச் சேற்றில் மூழ்கியிருந்த என்னை தூக்கி எடுத்து விட்டு,
கழுவி, பரிசுத்தப்படுத்தி உமக்கு பிரியமானவனாக மாற்றிவிட்டீர். நன்றி.
இறைவா உம்மை நான் நேசிக்கின்றேன். உம்மை விரும்புகிறேன்.
என் சோர்வுகள் என்னை விட்டு நீங்கிப்போவதாக.
என் பரம்பரை பலவீனம் மாறி உற்சாகமாக இருப்பதாக.
இறைவா என் இராஜனே உம் நாமம் மகிமையடையட்டும்.
உம்மை உயர்த்தி போற்றிப் புகழ்ந்து ஓயாமல் ஆராதிக்க வேண்டும்
என் இரட்சகரே என்னை கைவிடாதேயும். நான் உமது மகன்.
என்னை இன்னும் பரிசுத்தமாக்கும். உம்முடைய அன்பினால் நிறைத்திடும்
உமக்குள் நான் வாழ்வடைந்தேன். உம்மிலே நான் ஜெயம் பெற்றே
என் வாழ்வை நான் உமக்கென அர்ப்பணித்து விட்டேன்.
இனி நானல்ல, என்னில் நீரே வாழ்கின்றீர். ஸ்தோத்திரம்.
துதி, கனம், வல்லமைக்கும் பாத்திரரே, என் இயேசு இராஜாவே
உம்மாலே நான் தூய்மையாக்கப்பட்டேன். நன்றி பலி ஏறெடுக்கின்றேன்
என்னையும், என் பிள்ளைகளையும் நீர் அங்கீகரியும்.
அக்கினியால் எனக்கு பதில் தந்து பரிசுத்தப்படுத்தும் - ஆமென்.

24-08-09

இறைவா, என் ஜீவனை விடவும் உம்மை நான் நேசிக்கின்றேன்.
உம்மோடு வாழ்வதை பெரும் பாக்கியமாக நான் கருதுகிறேன்.
உலகத்தை நான் வெறுத்து அதின் இச்சைகளை நான் அருவருக்கின்றேன்
தேவாதி தேவனே என் இராஜாதி இராஜனே உம்மை போற்றுகிறேன்.
உம்மை துதித்துப்பாடி கீத முழக்கங்களோடே ஆராதிப்பேன்.
வானத்தையும், பூமியையும் படைத்த என் தேவன் சர்வ வல்லவராமே!
அவருடைய பிரியமான மகனாக நான் இருக்க கிருபை செய்யுமே!
வல்லமையையும், மகிமையையும் கொண்டிருப்பவராம் என் இயேசுவே.
உம்முடைய வார்த்தைகளை என் இருதயத்தில் பதித்துவிடும்.
உம்முடைய வசனங்கள் என் நாவில் எழுதப்படட்டும்.
நான் பேசும் வார்த்தைகள் யாவும் உம்மை மகிமைப்படுத்தட்டும்,
உம்முடையவைகளையே பேசி பிதாவின் சித்தத்தை நிறைவேற்ற செய்யும்.
பரிசுத்த ஆவியானவரே, எனக்குள்ளே வாசம் செய்கிறவரே
உமக்கு கோடான கோடி நன்றிகள் சுவாமி. ஸ்தோத்திரம்.
நாள்தோறும் என்னை தேவ வழியில் நடத்தி வருவதற்காக ஸ்தோத்திரம்.
துதியின் கீதம் தொனிக்கச்செய்து அவரை உயர்த்தச் செய்வதற்காக நன்றி
மகிமை, மாட்சிமை என்றென்றும் தம்மேல் கொண்டிருப்பவரே
உம்முடைய நித்திய வெளிச்சம் என்னை சூழ்ந்துக்கொள்வதாக.
புதிய புதிய கிருபைகளாலே என்னை உமக்குள் நிறுத்தும்.
நான் வாழவும், உமக்கென மகிமையாக ஊழியம் செய்யவும் வையும்.
உம்மில் நான் நாள்தோறும் நன்மைகளை ருசி பார்க்கின்றேன்.
சுவைத்திடும் கனிகளை உம்மிடத்திலிருந்து பெற்றுக்கொள்கிறேன்.
நிறைய பொறுமையை எனக்குத் தந்து உமக்காக காத்திருக்கச் செய்கிறீர்,
அன்பு உள்ளத்தை எனக்களித்து அனைவரையும் அன்பு செய்ய வைக்கிறீர்
உம்மைப்போல இரக்கத்தை என் இருதயத்தில் வைத்து தேற்றுகிறீர்.
இச்சைகளை அடக்கின்ற வல்லமையை எனக்களித்தீர்.
சாந்தமாக எல்லோரிடத்திலும் இருக்க என்னை பயிற்றுவிக்கின்றீர்.
எல்லாரிடத்திலும் தயவுடன் நடந்துகொள்ள கிருபை அளித்தீர்.
பெரியவரிடத்திலும், உம்மிடத்திலும் கீழ்ப்படிதலுள்ளவனாக என்னை மாற்றினீர்
தாழ்மையோடே இருக்கவும், உம்மில் உயர்ந்தவனாக வளர்க்கின்றீர்
உமக்கென தெரிந்துக்கொண்டு நாள்தோறும் என்னை நடத்துகின்றீர்.
உம்மை அறிந்துக்கொண்டதாலே நானும் உம் பிள்ளையானேன்.
ஆபிரகாமோடும், ஈசாக்கோடும், யாக்கோபோடும் கூட நானும்
பரலோகத்தில் பந்தியிருக்க போவது நிச்சயமே.
அந்நாளில் அவர்களோடும், பரிசுத்தவான்களோடும், தேவதூதர்களோடும்
என் இயேசுவே உம்மோடும் சேர்ந்து பிதாவை நான் ஆராதிப்பேன். ஆமென்.

25-08-09

இராஜனே என்னை வழி நடத்தும். உம்முடைய வார்த்தைகளுக்கு கீழ்ப்படியணும்.
வேதத்தில் உள்ள எல்லா கற்பனைகளுக்கும் நான் கீழ்ப்படியணும்.
இறைவா, என் இயேசுவே உம்முடைய வார்த்தைகளை கைக்கொள்ள வேண்டும்
உம்முடைய வார்த்தைகளை தியானித்து மெய் பொருளை அடைய வேண்டும்.
உம்முடைய வார்த்தைகளை என் இருதயத்தில் மனப்பாடமாக வைக்க வேண்டும்
உம்முடைய வசனங்களை என்னில் ஏற்று அதின்படி நடக்க வேண்டும்.
அடையாளங்களை தேடும் விபசார சந்ததியைப் போலல்லாமல்
உம்மைப்போல பிதாவின் வழியில் நடக்க என்னை பழக்கப்படுத்த வேண்டும்
என்னை நான் அன்பு செய்வதைப் போல பிறரை அன்பு செய்ய வேண்டும்
எல்லாருக்கும் கனிதருகின்ற பிள்ளையாக நானாக வேண்டும்.
உம்முடைய வசனங்களை வீட்டு வெளியே நான் போதிக்க வேண்டும்.
என் சுயத்திலிருந்து நான் பேசாமல் உம்முடைய வசனத்திலிருந்து பேச வேண்டும்.
சாந்த குணத்தோடு, அன்புள்ளத்தோடே நடந்துக்கொள்ள வேண்டும்.
தெய்வீக ஞானத்தோடும், தெய்வீக வல்லமையோடும் உமக்கும், பிதாவிற்கும்.
பரிசுத்த ஆவியானவருக்கும் கீழ்ப்படிந்து நடக்க வேண்டும்.
என்னுள்ளமே நீ இளைப்பாறு. கர்த்தர் எனக்காக யாவற்றையும் செய்து முடிப்பார்
நாள்தோறும் பரிசுத்தப் பாதையிலே வெற்றியோடு நடந்து வரணும்.
பிசாசின் தந்திரங்களை அறிந்து அதை மேற்கொள்ள வேண்டும்.
உம்முடைய வசனங்களை மிகுதியாக நான் தியானிக்க வேண்டும்.
அந்தி கிறிஸ்துக்களுக்கு விலகி, உம்மை அறிந்து ஆராதிக்க வேண்டும்.
விழிப்போடிருந்து உம் மகிமையை நான் காண வேண்டும்.
என்னை நான் உம்மிடத்தில் ஒப்புக்கொடுத்தேன். நீர் வாழ்க வாழ்க.
என்னை யாரும் எதை செய்தாலும் அது உமக்கு செய்வதைப் போலாகும்.
இறைவா இந்தப் பாத்திரம் உமக்கு சித்தமானால் உமக்கு பிரியமானதாகட்டும்
இயேசுவே இந்தப் பாத்திரம் நீரும், பிதாவும் வந்து தங்கும் இடமாகட்டும்.
இராஜாதி இராஜாவே உம்முடைய சிங்காசனமாக என் இருதயம் மாறட்டும்.
தெய்வீக அமைதியோடும், தெய்வீக ஞானங்களோடும் வலம் வர வேண்டும்.
மிகுதியாக பேசாமல், எப்பொழுதும் உமக்கு பிரியமானதை பேச வேண்டும்.
என் நாவு அக்கிரமத்தை, இச்சகத்தை பேசாமல் உம்மைப்பற்றி பேச வேண்டும்.
காலங்கள் மாறிப்போகும். நீரும் உம் இராஜ்யமும் என்றென்றும் மாறாதது.
ஆத்தும மணவாளரே உம் அன்பை நான் காண்கின்றேன்,
உமக்காக காத்திருக்கின்றேன். உம்முடைய இராஜ்யத்திற்காக உள்ளேன்.
என்னை ஏற்றுக்கொள்ளும். கைவிடாதேயும். நான் திக்கற்றவன்.
எனக்காக யாருமில்லை. ஆனால் என்னோடு நீர் இருக்கிறீர்.
அன்பே என் உயிரே நீர் போதும் எனக்கு அது என் சுதந்தரம்
அல்லேலூயா. சேனைகளின் கர்த்தர் பரிசுத்தர், பரிசுத்தர், பரிசுத்தர். ஆமென்.

26-08-09

கிருபையின் தேவா உம்மை நான் எந்நாளும் போற்றித் துதித்திடுவேன்.
உம் நீதியை நான் எவ்வளவாக விரும்பி ஏங்கித் தவிக்கின்றேன்.
என் கருணை கடலே. நீங்காத இன்பமே நீர் வாழ்கவென்பேன்.
உம்முடைய வார்த்தைகளை என் இருதயத்தில் கொள்ள வேண்டும்.
அது நல்ல நிலத்தில் விதைக்கப்பட்ட விதையாக வளர்ந்து பலன் தர வேண்டும்.
என் இராஜனே என் தேவனே உம்மை நான் நமஸ்கரிக்கின்றேன்.
உம்முடைய மணவாட்டியாய் நான் பரிசுத்தமாக என் மணவாளன் உமக்காக
விழித்து கண்ணோக்கி பார்த்துக் கொண்டிருப்பேன்.
என் உன்னதத்தின் தேவனே. என் உயிருள்ள இராஜனே நீர் வாழ்க.
உம்முடைய வெளிச்சத்தின் பாதையிலே நான் நடக்க விரும்புகிறேன்.
உம்முடைய வழியே மெய்யான வழியென்று நான் அறிந்துக் கொண்டேன்.
மந்திர தந்திரங்களுக்கு நான் அஞ்சேன். உமக்கே நான் பயந்து நடப்பேன்.
உம்முடைய வார்த்தைகளுக்கு நான் கீழ்படிந்து நடப்பேன்.
சவுலைப்போலல்லாமல் உம்முடைய வார்த்தைகளை நான் கைக்கொள்வேன்
ஆண்டவரே அன்பே உருவான என் சிருஷ்டிகரே நீர் வாழ்க வாழ்க.
உம்மை நோக்கி நான் ஏங்குகிறேன். கனிவாய் உதவி செய்யும்.
நான் உம்முடைய சந்நிதியில் பயத்துடனும், நடுக்கத்துடனும் வந்திடுவேன்.
அதே சமயத்தில் உம்முடைய நீதியை நான் இன்பமாக ஏற்றுக்கொள்வேன்.
தேவாதி தேவனே நீர் பெரியவரானவரே உலகத்தின் சிருஷ்டிகராவே! வாழ்க
நான் நாள்தோறும் சிறுகணும். என்னில் நீர் நாள்தோறும் பெருகணும்.
கல்வாரியின் அன்பை நான் முற்றிலுமாக புரிந்துக் கொள்ள வேண்டும்.
தேவனுடைய சித்தத்தின் படி நான் நடக்க வேண்டும்.
ஏனெனில் அவரல்லாமல் என்னால் ஒன்றும் செய்ய முடியாது.
பெரியவரே என் தூயவரே உமக்கே ஸ்தோத்திரம் உண்டாகட்டும்.
என்னில் சோர்வுகள் அகன்றிடட்டும். சுறுசுறுப்பாக இயங்க வேண்டும்.
கலங்கிய இருதயத்தோடல்லாமல் சமாதானமாக வாழ வேண்டும்.
அப்பா என் ஆண்டவரே, அன்ன அன்ன இணையாத என் அமுதமே!
உம்முடைய சித்தம் என்னில் நிறைவேறட்டும். நான் மகிழ்ச்சியடைவேன்.
நிந்தை, அவமானங்கள் எது வந்தாலும் நான் பயப்படமாட்டேன்
தேவனே உம்முடைய அன்பொன்றையே எண்ணி விரும்பியிருப்பேன்.
மணவாளனுக்காக ஏங்கும் மணவாட்டியாக நான் உமக்காக ஏங்கியிருப்பேன்.
காதலனுக்காக ஏங்கும் காதலியைப் போல நான் உமக்காக ஏங்கியிருப்பேன்.
இறைவா உமக்குள் யாவும் பரிசுத்தமாக இருப்பதைப் போல
என்னையும், என் தேகத்தையும் பரிசுத்தமாக மாற்ற வேண்டும்.
ஆண்டவரே என் மெய் தேவா நீர் வாழ்க. உம் இராஜ்யம் வாழ்க.
நீங்காத உம் இராஜ்யம் இறங்கி வர வேண்டும். ஆமென்.

27-08-09

என் கன்மலையானவரே, தெரிந்துகொண்டோரை எக்காலத்திலும் காப்பவரே.
உம்முடைய வல்லமையான நாமம் என்றென்றைக்கும் ஸ்தோத்திக்கப்படுவதாக.
இராஜாதி இராஜா தேவாதி தேவா உம்முடைய கிருபைக்காக ஸ்தோத்திரம்.
என்னை மிகவும் நேசிக்கிற என் மகிமை நிறைந்த பிதாவே
உம்முடைய குமாரனின் மூலமாக நான் உம்மை காண வழி செய்தவரே!
நீர் மாத்திரம் என்னை தெரிந்துகொண்டிருக்காவிட்டால் நான் என்னவாகியிருப்பேன்
நானறியேன் என் தேவனே. என் இரட்சகரே ஆவியானவரே!
இதோ, அழுகையும், பற்கடிப்புமான குழியில் நான் மூழ்கிபோயிருப்பேன்.
ஆனால் உம்முடைய கிருபையால் நான் சமாதானம் பெற்றுக்கொண்டேன்.
என் இருதயத்தின் நினைவுகளில் எத்தனை பொல்லாப்புக்கள்!!
தேவா நன்மைகளையே சிந்திக்க வேண்டுகிறேன்.
உம்மோடு இன்னும் அதிக நேரம் செலவு செய்ய ஆசைப்படுகின்றேன்.
நான் உம்மோடு வழி நடந்தால் எனக்கென்ன குறை ஏற்படும்!!
எல்லாம் சுகமே, எந்நாளும் சுகமே, எப்பொழுதும் சமாதானமே
இரவும் பகலும் உம்மையே சார்ந்து நிற்கின்றேன். அதனால்
என் மாம்சம் எவ்வளவு பலவீனமாக இருக்கிறது என்று நீர் அறிவீர்.
உம்முடைய சித்தம் எதுவோ அதுவே நிறைவேறுவதாக.
அநாதி ஸ்நேகத்தால் என்னை நீர் ஸ்நேகித்து அன்பு கூர்ந்தீர்.
பதில் நினையாத அன்பு, உண்மையானவரான இயேசுவின் அன்பு
தேவனின் வார்த்தையாக இப்புவியில் வந்திறங்கிய திருநாதர் இயேசு.
சிலுவையில் நீர் காட்டிய உமது அன்பினால் நான் இரக்கம் பெற்றேன்.
தலையில் நீர் அமர்ந்த முள்முடியால் நான் நித்திய கிரீடத்தை பெற்றுக்கொண்டேன்
ஆண்டவரே உம்முடைய காயங்களால் நான் சுகத்தை பெற்றுக்கொண்டேன்.
நீர் வாழ்க. உம்முடைய இராஜ்யம் என்றென்றும் போற்றப்படுவதாக.
சிங்காசனத்தில் வீற்றிருக்கின்ற எங்கள் நல்ல சிருஷ்டிகரே
உம் நாமம் மகிமையென்னும் கிருபையினால் நிறைந்திருக்கிறதே!
இராஜ்யம், வல்லமை உமதே. நீர் எங்கள் சுதந்தரமே!
என் ஆத்துமாவிற்கு தேவரே, என் ஆவியின் அதிபதி!
இறைவா நித்திய காலமாய் நீங்காமல் நீர் இராஜ்யம் செய்கின்றீர்
அடியேனை நினைத்தீர். ஆசீர்வதித்தீர் நன்றி நன்றி.
காலங்கள் உமது கரத்தில். என் வாழ்வும் உம் சமுகத்தில்.
உமக்கு மறைவானது என்னிடத்தில் ஒன்றுமில்லை தேவா!
உம்முடைய சிங்காசனம் என்றென்றும் ஸ்தோத்திரிக்கப்படுவதாக.
நீதியின் செங்கோலால் எங்களை ஆட்சி செய்வதற்காக நன்றி.
நிம்மதி தேடி உம்மோடு கலந்திட என் இதயம் தவிக்கிறது.
என்னை மறவாதேயும். நான் பாவி. உம்மால் பரிசுத்தம் அடைவேன்.

29-08-09

என்னை கண்ணோக்கி பார்க்கும் தேவனே உம் நாமம் மகிமைபடுவதாக.
உம்முடைய இராஜ்யம், வல்லமையும் என்றென்றைக்கும் ஸ்தோத்திரிக்கப்படுவதாக.
நீரே என் கன்மலையுமானவர். என்னை காத்து வழிநடத்துபவரும் நீரே
உம்முடைய எண்ணிலடங்கா நன்மை கிருபைகளுக்காக ஸ்தோத்திரிக்கின்றேன்.
உம் தூய வழியில் நான் நடக்க என் கால்களை பெலப்படுத்தும்.
உம் சித்தம் சிறப்பாக நிறைவேற என்னில் நீர் என்னை பயன்படுத்தும்.
இப்பாத்திரம் உமக்கு சித்தமானதானால் பரிசுத்தம் செய்யும்.
இந்த எளியவனின் ஜெபத்தை கேளும். இரட்சித்துக் காரும்.
உம்முடைய நாமம் என்றென்றும் மகிமையடைவதாக. நீரே வாழ்க.
இறைவா என்னை இன்னும் பரிசுத்தமுள்ளவனாக மாற்றும்.
உம்மாலே எல்லாம் கூடும். கூடாதது ஒன்றுமில்லை தேவா!!
ஆண்டவரே என் தேவனே உம்மையல்லாமல் எனக்கு யாருமில்லை.
உம்முடைய நீதியின் படி என்னை நடத்தும். நான் ஒரு மானுடன் தானே!
மண்ணிலிருந்து உண்டான ஏழையவன் தானே! தாழ்ந்தவன் தானே!
நான் என்றைக்கும் பிரயோஜனமற்றவன் தானே! மண்ணாகப் போவேன்.
இறைவா என் ஜெபம் உம்மோடு கலந்து விடட்டும்.
உம்முடைய வல்லமையான கரம் என்னை தாங்கி வழிநடத்தட்டும்.
நானும் என் வீட்டாரும் உம்மையே நேசித்து அகமகிழ்வோம்.
என் அன்பே, என் ஆறுதலே நீர் மாத்திரம் போதும் எனக்கு.
நல்ல மேய்ப்பரே என்னை நடத்தும் நல் ஆயனே நீர் வாழ்க.
இரக்கர் இயேசு, கிருபை நாயகர் என் இயேசு யூத ராஜ சிங்கம்.
ஆண்டவரே நான் சோர்ந்து போயிருக்கின்றேன். நீரென்னை வழிநடத்தும்.
உம்முடைய பிரசன்னத்தினால் என்னை தாங்கிக்கொள்ளும். ஆமென்.
அழகே என் ஆறுதலே தெவிட்டாத இன்பமே உம் நாமம் மகிமையடைவதாக.
உம்முடைய அன்பினால் என்னை நிறைத்துவிடும். நீர் வாழ்க.
நான் தாழ்ந்து போக வேண்டும். நீர் பெருக வேண்டும்.
உம்முடைய அன்பு பெருக வேண்டும். உம்முடைய இரக்கம் பெருக வேண்டும்
இப்புவியை நீர் காப்பாற்றும். எல்லா ஜனங்களையும் காப்பாற்றும்.
ஒவ்வொருவரும் இரட்சிக்கப்படுவதாக அனைவரையும் நீர் சேர்த்துக்கொள்ளும்.
ஆத்துமாக்கள் கோடான கோடி. இறைவா உமக்கு தான் சொந்தமானது.
அவர்களுடைய உள்ளத்தில் நீர் பேசிடும் தேவா.
நீர் தான் மெய்யான தேவன். உம்மாலே இரட்சிப்பு உண்டு,
என்று இப்புவி அறியட்டும். அதுவே நீர் செய்யும் அற்புதமாயிருக்கும்
ஆண்டவரே அதிசயரே நீர் வாழ்க வாழ்க உம் இராஜ்யம் வாழ்க.
காலை தோறும் உம் புதிய கிருபைகளை ஸ்தோத்திரம்
ஆண்டவரே உம் நீதி என்றென்றும் போற்றப்படுவதாக. ஆமென்.

30-08-09

இறைவா என் கருணை தேவா உம்மை ஸ்தோத்தரிக்கின்றேன். நீர் வாழ்க
உம்முடைய இராஜ்ஜியம் என்றென்றைக்கும் போற்றப்படுவதாக.
உம்முடைய வல்லமையும், மாட்சிமையும் என்றென்றைக்கும் போற்றப்படுவதாக.
நீர் சர்வ வல்லவர். உம்முடைய நிழலில் நான் தங்கிடுவேன்.
உம்மைப் பிரிந்து என்னால் வாழ முடியாது ஐயா, நீர் என் தேவன்.
உடன்படிக்கையின் தேவனாம் என் சர்வ வல்லவர் யெகோவா தேவன்.
உம்முடைய பிரசன்னத்தினால் என்னை மூடிக்கொள்ளும் நான் களைப்பாறுவேன்.
தேவா என் இராஜா உம்மாலே நான் ஒரு சேனைக்குள் பாய்ந்திடுவேன்.
எல்லா மதில்களையும் தாண்டிடுவேன். எதுவும் என்னை சேதப்படுத்த முடியாது.
என் இரட்சகரே என் தேற்றரவாளனே உம் நாமம் என்றும் போற்றப்படுவதாக.
உம்முடைய சித்தம் இப்புவி முழுவதும் நிறைவேறி வருவதாக.
என்றும் மாறாதவர், மகிமையின் தேவன் நீர்தானே அல்லோ?!.
உமக்கே என் நன்றி பலிகளை செலுத்துகின்றேன். நீர் நல்லவர்.
உம்முடைய இரக்கம். மனதுருக்கம் இவற்றால் நான் மகிழ்கின்றேன்.
இராஜா என் தேவா உம்மைப்போல நான் பரிசுத்தமடைய வேண்டும்.
இயேசுவே உம்மைப்போல நான் வாழனும். உம் நாமம் உயரணும்.
உம்முடைய சர்வ வல்லமையை இவ்வுலகம் காண வேண்டும்.
எல்லா துதி கனம் மகிமையை இப்புவலகம் உமக்கே செலுத்த வேண்டும்.
நன்றி பலி தினந்தோறும் நான் உமக்கு செலுத்திடுவேன்.
நல்லவராம் என் தேவன் உம்மை துதித்துப் பாடுவேன்.
என் இதயம் பாவங்களை நினையாமல் உம்மையே
நினைத்து துதித்து நிலைபெற்று பரிசுத்தமாக்கப்பட வேண்டும்
என் நேசரே, என் துணையாளரே உம் நாமம் உயரணும்
நீரே என் கன்மலை, நீரே என் கோட்டை உம் நாமம் வாழ்க
நீரன்றி என்னால் ஒன்றும் செய்யக் கூடாது. அணுவும் அசையாது.
உம்மாலே எல்லாம் கூடும். உம்மாலே நான் வாழ்வடைந்தேன்
உமக்குள்ளே நான் எல்லாக் கிருபையும் பெற்றுக்கொண்டேன்
உம்மாலே நான் எப்பொழுதும் சந்தோஷமாக இருக்கின்றேன்
நீரே என் தேவாதி தேவன். உம்மாலே நான் இரம்மியமாக உள்ளேன்
உமக்குள்ளே நான் ஒரு சேனையும் ஜெயித்துக்கொள்வேன்
உம்முடைய தயாளமான மகிமையை நான் கண்டுக்கொண்டேன்.
அக்கினியின் அபிஷேகத்தை நான் பெற்றுக்கொண்டேன்
மணவாளன் உமக்காக மணவாட்டி நான் காத்திருக்கின்றேன்
நீரே என் தேவன், உம்மால் நான் கிருபை பெற்றேன்.
எல்லாம் வல்லவர் உம்மாலே நான் ஜெயித்தெழுகின்றேன்.
உமக்குள்ளே நான் ஜீவன் பெற்று சந்தோஷமாக ஜீவித்துப் போவேன்.

31-08-09

இறைவா என் கண்மணியின், என் அன்பின் தகப்பனே நீர் வாழ்க.
உம்முடைய இராஜ்ஜியம் என்றென்றும் போற்றப்படுவதாக ஆமென்.
வல்லமையும், மகத்துவமும் உமக்கே சொந்தமாயிருக்கிறது.
இறைவா உம்முடைய எண்ணிலடங்கா ஸ்தோத்திர பலிகளை நான் ஏறெடுக்கிறேன்
சேனைகளின் கர்த்தர் பரிசுத்தர் பரிசுத்தர் பரிசுத்தர் பூமியனைத்தும்
உம்முடைய மகிமையால் நிறைந்திருக்கிறது. அல்லேலூயா ஆமென்.
இராஜாதி இராஜனே, தேவாதி தேவனே உம்முடைய கிருபை மேலானதே!
எல்லாவற்றிலும் மேலான நாமம் உம்முடைய பரிசுத்த நாமம்.
உலகமெங்கும் உம்முடைய மகிமை விளங்கப்படுவதாக.
எல்லா நாளிலும், எல்லா நேரத்திலும் உம் வசனம் என் இருதயத்தில் இருப்பதாக
உம்முடைய பெரிதான கிருபையினால் என்னை மீட்டுக்காத்துக்கொள்ளும்.
உம்முடைய இரக்கம், மகத்துவம் எவ்வளவு பெரிதானதாக உள்ளது.
இறைவா என் இரட்சகரே, என்மேல் பாசமிகுந்தவராய் இருப்பவரே
உம்முடைய மேலான நாமம் என்றென்றும் போற்றப்படுவதாக.
எல்லாம் வல்லவருக்கு என்னுடைய அன்பினை காணிக்கையாக்கின்றேன்
பரிசுத்தராம் உம்முடைய வல்லமை எல்லையெங்கும் விளங்கட்டும்.
ஆண்டவரே, அதிசயமானவரே என் வற்றாத நீரூற்றே நீர் வாழ்க.
உமக்கு சித்தமானவர்களின் மேல் கிருபையோடு இருப்பவரே
என் பேரின்பமே, என் தடைபடாத அருமையே நீர் போற்றப்படுவீராக.
உலகமெல்லாம் உம்முடைய நாமம் அறிவிக்கப்படுவதாக.
ஏகமே என் தெய்வமே உம்மையே நான் அதிகம் நேசிக்கின்றேன்.
உம்முடைய நாமத்தினால் நான் யாவற்றையும் ஜெயம் கொள்வேன்.
ஆண்டவரே என் ஆருயிர் நண்பரே, என்னை நேசிக்கும் நல் தகப்பனே
உம்முடைய பரிசுத்த ஸ்தானத்திற்கு பயபக்தியோடு வந்திடுவேன்.
அப்பா பிதாவே என் அன்பான தேவா உம் நாமம் வாழ்க வாழ்க.
இராஜாதி இராஜா, தூயாதி தூயவரே உம் நாமம் எல்லாவற்றிலும் மகிமையுடையதாக
நித்தமும் தவறாமல் உம்முடைய சத்தியத்தில் நான் வாழ வேண்டும்.
முதலாவதாய் உமக்குள் நான் மிகமிக பரிசுத்தமடைய வேண்டும்.
அதேபோல உம்முடைய வல்லமையான வழியை நான் பின்பற்ற வேண்டும்.
உம்மை நான் தரிசனமாகக் கண்டுகொள்ள வேண்டும். அதை தானமாக தாரும்.
ஆண்டவரே என் மேய்ப்பரே நீர் வாழ்க வாழ்கவென்று வாழ்த்திடுவேன்.
மகிமையின் தேவனே, என் மகத்துவரே நீர் வாழ்கவென வாழ்த்திடுவேன்
உம்முடைய கிருபைக்காக நன்றி செலுத்தி காத்திருக்கின்றேன்.
உம்முடைய இராஜ்ஜியம் என்றென்றும் போற்றப்படுவதாக.
இறைவா என்றென்றும் உம்முடைய மேலான ஆசீர்வாதங்களுக்காக நன்றி.
இராஜா நீர் பெரியவர். நான் சிறியவன். அல்லேலூயா.

01-09-09

இறைவா என் சர்வமும் ஆனவரே உம்மை துதிக்கின்றேன்.
உம்முடைய நீதியைத் தேடி ஓடி அலைகின்றேன்.
உம்மை நீர் எனக்கு தந்தீர். நானும் என்னை உமக்கு ஜீவபலியாக்கினேன்.
பரிசுத்தம் என்னில் குடிகொள்ளட்டும். ஜெபவீரன் என்று நீர் பெயர் எடுக்கும்.
உம்முடைய நீங்காத இராஜ்யத்தை எனக்கு தந்தருளும்.
நான் உம்முடைய பிள்ளை. உமக்கு என் பரிசுத்த ஸ்தோத்திர பலிகள்.
உம்மை நான் நேசிக்கின்றேன். உம்மையே நான் இரசிக்கின்றேன்.
உம்முடைய பட்டயம் என்னில் என்னுள்ளத்தில் குடிகொண்டிருக்கட்டும்.
நான் உம்மை நேசிப்பது எவ்வளவாகவென்று நீர் அறிவீர்.
ஆண்டவரே உலகம் உம்மை அறியாதிருப்பது எவ்வளவு வேடிக்கை?!
இறைவா உம்மை வெளிப்படுத்தும். அதனால் உலகம் இரட்சிக்கப்படக்கூடுமல்லவா?
இறைவா என் இராஜா, தேவா என் இரட்சகரே நீர் வாழ்க.
நான் உம்மை நேசித்து மிகுதியாக அன்பு கூருகின்றேன்.
இரட்சிப்பும், வல்லமையும், மகிமையும் உமக்கே சொந்தமானது.
இறைவா எனக்கு நீர் பெலன் தாரும், நான் திருப்தியடைவேன்.
உமக்குள்ளே எனக்கு இளைப்பாறுதல் உண்டு. நித்திய மகிழ்ச்சியுமுண்டு.
என் கன்மலையானவரே, என்னை காக்கும் தெய்வமும் நீரே!
உம்முடைய இராஜ்யத்தில் நீர் சிங்காசனத்தில் அமர்ந்திருக்கின்றீர்.
உமது அருகேயிருந்து நான் உம்மை ஆராதனை செய்துக்கொண்டிருக்கிறேன்.
உமது பரிசுத்த ஸ்தலத்தில், பரிசுத்த தூதர்களோடு வந்தனம் செய்கின்றேன்.
பரிசுத்த மூப்பர்களோடு உம்மை துதிப்பாடி போற்றுகின்றேன்.
நியாயாதிபதிகளோடு அமர்ந்து உமது வசனத்தை பேசிக்கொண்டிருக்கிறேன்.
நிம்மதியும், சமாதானத்தோடும் இயேசுவே உம்மை வாழ்த்திக்கொண்டிருக்கிறேன்.
நான் நன்றிபலிகளை உம்முடைய பாதத்தில் படைத்துக்கொண்டிருக்கின்றேன்.
என் இராஜனே, என் தேவனே உம்மை நான் நேசிக்கின்றேன்.
நான் வாழ்வதும் உமக்காக. நான் மரிப்பதும் உம்மில் உயிர்ப்பதற்காக.
நல்ல ஆயனே, இந்த ஆடுக்காக உம் ஜீவனையும் தந்த மீட்பரே!
என் மீட்பரே! என் இரட்சகரே உம்மை அறிக்கை செய்கின்றேன்.
என் சோர்வுகளை அகற்றி என்னை உற்சாகப்படுத்தும் தேவா!
நான் துவண்டு போயுள்ளேன். உம்முடைய ஆவியினால் நிறைத்திடும்.
அன்பே என் நேசரே என் சகலகலா சர்வவல்லவர் இயேசு ராஜனே.
இறைவா உம்மை நான் முழுவதும் நேசிக்கின்றேன்.
உம்முடைய வருகை சமீபமாக இருக்கின்றது என அறிவேன்.
இப்புவனத்தை முழுமையாக மீட்டுக்கொள்ளும். அது உமது சித்தம்.
உம்முடைய வல்லமை இப்புவி முழுவதும் பரவுவதாக.
அல்லேலூயா ஆனந்த முழக்கத்தோடு உம்மை ஆராதிக்கின்றேன்.

02-09-07

என் தேவனே என் இராஜனே என்னை மன்னித்தருளும்.
நான் ஒவ்வொரு நிமிடமும் பாவியாக நிற்கின்றேன்.
என் இனம் இவ்வுலகத்திலிருந்து பிரிந்திருக்கின்றது.
உம்மைப்போல இணையில்லாதவனாக என்னை நீர் மாற்றும்.
என் இரட்சகரே என் நல்ல தகப்பனே உம் நாமம் வாழ்க.
உம்முடைய சிம்மாசனம் இப்பூமி எங்கும் விளங்கி வருவதாக.
இராஜ்யமும், வல்லமையும், மகிமையும் உமக்கே உண்டாகியிருப்பதாக.
உம்மைப்போல தெய்வம் இவ்வுலகில் வேறு எங்குண்டு?!
நீரே உம்முடைய கிருபை சிங்காசனத்தில் அமர்ந்திருக்கின்றீர்.
எங்களை இரட்சிப்பதற்காக உம்மை நீர் எனக்காக ஒப்புக்கொடுத்தீர்.
இராஜனே, உம்மேல் நம்பிக்கையாய் இருப்போருக்கு நீர் அதிசயம் செய்கிறீர்
உம்மை எதிர்ப்பவர்களையும் நீர் எப்போதும் அன்பு செய்கின்றீர்.
இராஜனே என் தெய்வமே, என் சர்வ லோகாதிபதியானவரே!!
உம்மை நான் போற்றிப்பாடுகின்றேன். இறைவா நமஸ்கரிக்கின்றேன்.
நீரே என் ஆவியானவர், நீரே என் சர்வ வல்லவரான ஸ்ரேஷ்டகர்.
அப்பா பிதாவே, என் அன்பே உயிரான தேவனே நீர் வாழ்க.
உம்மையல்லாமல் எனக்கு வேறு யார் இங்குண்டு?
நீரே எல்லாரிலும் பெரியவர். நீர் மாத்திரம் எனக்குப் போதும்!!
நான் உம்மிலே எந்நாளும் பலன் கொண்டவனாய் இருக்க விரும்புகிறேன்.
எனக்குள் எத்தனை மீறுதல்கள், என்னாலே சொல்ல முடியவில்லையே!
இறைவா என்மேல் இரக்கமாயிரும். நான் உமக்கு பிரியமானவன்.
என் மீறுதல்களை எண்ணாதேயும். அவை மிகுதியானதாய் இருக்கின்றன.
கருணையே என் கர்த்தரே, உம் நாமம் ஸ்தோத்திரிக்கப்படுவதாக.
நான் எந்நாளும் உம்மை நினைத்து பக்தியாய் நன்றிபலிகளை
செலுத்தி, ஆராதனை செய்து போற்றுகின்றேன்.
என் தனிமையில் நீர் என்னோடு கூட இருந்து என்னை நடத்துகின்றீர்.
நான் எப்போதும் உம்மை மறவாமல் என் தலைமுறைக்கும்
உம்மை போதிப்பேன். அவர்களும் அவர்கள் தலைமுறைக்கு
போதித்து என் வழி வந்தோர் உம்மை எந்நாளும் சேவிக்க வேண்டும்.
இறைவா, நீர் என்னை தெரிந்துக்கொண்டது போல
என் பிள்ளைகள், என் பிள்ளைகளின் பிள்ளைகள், அவர்களின்
பிள்ளைகள் என இவ்வுலக முடிவு பரியந்தம் உம்மை
சேவித்து, உம்மை மகிமைப்படுத்தி வாழ வேண்டும்.
அவர்களுக்கு நீர் துணையாக இருந்து போதிக்க வேண்டும்.
இறைவா உம் நாமம் இவ்வுலகமெங்கிலும் மகிமைப்படுத்தப்பட வேண்டும்.
உம்முடைய கிருபை எந்நாளும் பெருக வேண்டும். அல்லேலூயா.

03-09-09

என் இரட்சகரே. என் அன்பானவரே என் இராஜாதி இராஜனே
உம்முடைய கிருபைக்காக ஸ்தோத்திரம். உமது அன்பிற்காக ஸ்தோத்திரம்.
வாழ்க்கையுடன் என்றும் உம்மை வாழ்த்தி நான் வாழ்ந்திடுவேன்.
உம்முடைய சிங்காசனத்தில் நீர் மகிமை பொருந்தியவராய் வீற்றிருக்கின்றீர்.
உம்முடைய அளவில்லாத நன்மை, கிருபைகளுக்காக ஸ்தோத்திரம்.
என் கரங்களை உமக்கு நேராக கூப்பி தொழுதுகொள்வேன்.
உம்மை எக்காளத்தோடும் ஸ்தோத்தரித்து அகமகிழ்ந்து பாடிடுவேன்.
இறைவா என் இருதயத்தின் ஆழத்திலிருந்து நன்றிபலிகளை ஏறெடுப்பேன்.
என் உள்ளத்தை உமக்கு நேராக்கி பரிசுத்தத்தை சார்ந்துகொள்வேன்
இறைவா எந்நாளும் உம்மை நமஸ்கரித்து போற்றிப் புகழ்ந்திடுவேன்.
ஆண்டவரே உமது இன்பமான, ஆரோக்கியமான பரலோகத்தில்
எந்நாளும் அமர்ந்து காத்திருந்து கிருபையைப் பெற்றுக்கொள்ள ஆசை.
இராஜாதி இராஜனே. தேவாதி தேவனே நீர் என்னோடு கூட இருக்கின்றீர்.
உம் நாமம் என்றும் உயர்த்தப்படுவதாக. நானும் உம்மை உயர்த்துவேனாக.
காலையில் பூத்து மாலையில் காய்ந்து மடிந்து போகும் பூவைப்போல
இடம், பெயர், பொருள் தெரியாமல் நானும் ஒருநாளில் போய்விடுவேன்.
ஆனால் என் தேவனே நீர் எந்நாளும் மாறாதவராய் இருக்கின்றீர்.
நீரே அல்ஃபா, ஒமேகாவும் ஆதியும்-அந்தமுமாய் இருக்கின்றீர்.
இறைவா உம்முடைய நன்மைகளையும், கிருபைகளையும் அறிவேன்.
இயேசுவே என்னை இன்றும் என்றுமாக பரிசுத்தப்படுத்த வேண்டுகிறேன்.
நீர் நல்லவர் நீர் சர்வ வல்லவர் எந்நாளும் வாக்கு மாறாதவர்.
உம்மைப்போல இவ்வுலகில் ஒருவருமில்லை. நீரே தேவன்.
இறைவா உம்முடைய அதிசயங்களும் வல்லமையும் மாறாதவைகளே!
உம்முடைய புதிய உடன்படிக்கையை என்னில் வைத்தமைக்காக நன்றி.
இயேசுவே உம்முடைய நாமம் எவ்வளவு உயர்ந்தது? எத்தனை பெரியது.
தேவகுமாரன் என்றும் மகிமையை துறந்து இவ்வுலகில் இறங்கி வந்தீர்.
இறைவா உம்முடைய எல்லா நன்மைகளுக்காக ஸ்தோத்திரம்.
ஆண்டவரே என்மேல் அன்புள்ளம் கொண்டு ஆசீர்வதித்தீரே
உம்மை எந்நாளும் நான் வாழ்த்தி, வாழ்த்திக்கொண்டே மறைந்து
மறைந்துப் போய்க்கொண்டே நித்தியத்தில் சேர்ந்துக்கொள்ள வேண்டும்.
என்னோடு கூட கோடான கோடி ஆத்துமாக்களையும் அழைத்துச் செல்ல வேண்டும்
இறைவா, நான் மாத்திரம் அந்த பேரின்பத்தை அடைய தகுதியல்ல.
இவ்வுலகம் முழுவதையும் உமக்கு பிரியமானதாக நீர் நினைக்க வேண்டும்.
எல்லா ஜாதி, ஜனங்கள் உம்மையே சேவிக்க வேண்டும்.
இதோ இந்த எளியவனின் ஆசை இதுவே!!!.
இறைவா இந்த ஏழையின் ஜெபத்தை கேட்டு பதில் தாரும். ஆமென்.

05-09-09

என் மேய்ப்பரே, என் வாழ்வின் ஒளி விளக்கே உமக்கு ஸ்தோத்திரம்.
உம்முடைய எல்லையில்லா நன்மை கிருபைகளுக்காக ஸ்தோத்திரம்.
இராஜாதி இராஜனே, என் தேவாதி தேவனே நீர் வாழ்கவென்று வாழ்த்துவேன்
எத்தனை நன்மைகள் என் வாழ்வில் நீர் செய்தீர். நன்றி நன்றி ஐயா.
என் ஏக்கமெல்லாம், என் எதிர்பார்ப்பெல்லாம் உம்மிடம்தானே ஐயா.
நான் உறங்குவதை விட வேண்டும். சோம்பலை தவிர்க்க வேண்டும்.
கண் விழித்து உம்மை நோக்கி ஜெபம் செய்ய வேண்டும்.
அப்பனே, என் அருள் நாதனே உம்மை நான் ஆவியிலே உண்மையோடு
ஆராதித்து, இவ்வுலகின் இரட்சண்யத்திற்காக மன்றாட்டை ஏறெடுப்பேன்.
இறைவா, என் ஆவியில் பிரியமாயிருக்கிற என் மணவாளரே
உம்மை உயர்த்தி உயர்த்தி, உம் நாமம் மகிமைப்படுத்துவேன்.
என் சிநேகிதரே உம்மையன்றி எனக்கு வேறு துணை என்பேன்.
நான் கருவறையில் இருக்கும்போது எனக்கு ஜீவனைத்தந்தவர் நீர்தானே!
நான் கல்லறைக்கு போனபின்பும் எனக்கு ஜீவனைத்தருபவர் நீர்மாத்திரம்தானே!
இறைவா உம்மை அன்போடு நான் ஆராதித்து அகமகிழ்வேன்.
உம்முடைய பிரசன்னத்தில் நான் தங்கி இளைப்பாறுவேன்.
நீர் உம்முடைய அக்கினியால் என்னை புடமிட்டு பரிசுத்தமாக்கும்.
நீர் உம்முடைய கிருபையானால் என்னை வழிநடத்தி சென்றிடும்.
உம்முடைய தோட்டத்தில் நான் கனிதரும் மரமாகவும்
சுவைதரும் பரிசுத்த பழமாக நான் மாறி ஊழியம் செய்யவும்.
இறைவா என்மேல் மனதுருக்கமாக இருக்கும் நல்லவரே
உம்மை நான் எந்நாளும் போற்றிப் புகழ்ந்து பாடுவேன்,
நான் உம்முடைய பிரியமான மகள். உமது சித்தம் செய்யவும்.
அதின் படி என் வாழ்வில் அதை நான் செய்து முடிக்கவும்.
என் சேனைகளின் கர்த்தர் நீர் பரிசுத்தர் பரிசுத்தர் என்று பாடவும்
ஆண்டவரே என் ஆத்தும நேசரே உம் பாதம் நான் கிடக்கவும்
உம்முடைய அன்பினால் என்னை நீர் நிரப்ப வேண்டும்.
உன்னை நான் அன்பு கூறுவது போல உம்மை நான் அன்பு கூறவும்
இராஜா என் மீட்பரே உம்மை நான் போற்றவும்.
உம்மையல்லாமல் எனக்கு வழிகாட்டியாக இங்கு யாருண்டு.
என் மேய்ப்பரே என் நல்லவரே நன்மைகளை செய்பவரே
உம்முடைய பாதம் எனக்கு போதும். நீரே என் பெலன்.
நீங்க போதும் இயேசப்பா உங்க சமூகம் எனக்கப்பா!
நான் வாழ்ந்தாலும் உமக்காகத்தான். மரிப்பதும் உமக்காகதான்!
ஜீவனை நான் பெற்றுக்கொண்டு நித்தியத்தில் சேர்ந்திடுவேன்!
அல்லேலூயா துதி கீதம் பாடி உம்மை ஸ்தோத்திரம் செய்வேன்.

06-09-09

என் பெலனானவரே என் ஜீவனின் அதிபதியே உம் நாமம் உயர்த்தப்படுவதாக.
எல்லையெங்கிலும் உம்முடைய வசனம் சென்று கிரியைகளை செய்வதாக.
நீரே என் பெலனும் அடைக்கலமுமாயிருக்கின்றீர். அல்லேலூயா ஆமென்.
உம்முடைய தெய்வீக பிரசன்னம் என்றென்றும் போற்றப்படுவதாக.
உம்முடைய சிங்காசனம் உமக்காய் என்றென்றும் வீற்றிருக்கின்றது.
என் ஆத்தும நேசரே, என் அன்பின் தகப்பனே உம் மேய பாதை வாழ்க.
உம்முடைய வழிகளில் எனக்கு எப்பொழுதும் நாட்டம் உண்டு.
என்னை சூழ்ந்திருக்கின்ற பயங்களைக் கண்டு நான் அஞ்சேன்.
பொல்லாப்புக்கும் நான் பயப்படாமல் உம் நீதியை கைக்கொள்வேன்.
என்ன சூழ்நிலைகள் வந்தாலும் நான் உம்மை உயர்த்தி மகிழ்வேன்.
இறைவா என் மேய்ப்பரே, என் மென்மையானவரே நீர் வாழ்க
உம் அன்பொன்றே எனக்கு போதுமானது உம் பெலன் பூரணமானது.
உம்மிலே நான் என்றென்றும் பெலன் பெற்றவனாக விளங்க வேண்டும்.
ஆராதனைக்குரியவரே என் ஆதியும், அந்தமுமானவரே நீர் வாழ்க வாழ்க.
உம் நாமம் என்றென்றும் மகிமைப்படுத்தப்படுவதாக. அல்லேலூயா
இறைவா உம் கிருபை என்றென்றும் பெரியது. அது போற்றத்தக்கது.
இராஜா உம் தெய்வபிரசன்னம் என்னை என்றும் சூழ்ந்துகொள்வதாக
நீர் பரிசுத்தர் பரிசுத்தர் பரிசுத்தர் என்று நான் முழங்க வேண்டும்.
எப்பொழுதும் உம்மை உயர்த்தி உயர்த்தி ஆறுதல் அடைய வேண்டும்.
கருணையுள்ள தேவனே என் அழகான பொறுமையின் தேவனே
உம்முடைய சித்தம் இந்த தோஹாவிலே நிறைவேறுவதாக.
இந்த கத்தார் தேசம் முழுவதும் இயேசுவே உமக்கு சொந்தமாவதாக.
ஆண்டவரே நீரே இந்த பாத்திரத்தை பிரயோஜனமாக பயன்படுத்துவீராக.
என் ஆத்துமாவை உம்மிடத்தில் ஒப்புவித்து பாதுகாப்பு கேட்கின்றேன்.
இறைவா, என் ஆத்துமா உமக்கு சொந்தமானது.
அதை கெடுக்க எனக்கு அதிகாரமில்லை. நான் உமது பிள்ளை.
ஆகவே இராஜனே உம்முடைய அதிகாரத்தின் கீழே நீர் வைத்துக்கொள்ளும்.
என் நினைவிலே அசுத்தம் இடங்கொள்ளாதிருக்கட்டும்.
உம்முடைய பரிசுத்தம் பரிசுத்தம் பரிசுத்தம் என்னில் பெருகி வரட்டும்.
இந்த பாவியான மனுஷனை நாள்தோறும் கழுவி பரிசுத்தப்படுத்தும்.
உம்முடைய அக்கினியால் என்னை நியாயந்தீர்த்து என்னை உருவாக்கும்.
ஆவியின் வரங்களினால் என்னை நிறைத்து பயன்படுத்தும்.
ஆண்டவரே என் ஆத்தும நேசரே உம் பாதம் போற்றுவேன்.
என் சிருஷ்டிகரே உம் சித்தம் நிறைவேற்ற எனக்கு உதவி செய்யும்.
இயேசுவே என்றும் உம்மை நான் ஆராதித்திடுவேன்.
வாழ்க. உம்முடைய இராஜ்ஜியம் இப்புவியில் வருவதாக. ஆமென்.

07-09-09

பரலோகத்திலிருக்கிற எங்கள் பிதாவே, உம்முடைய நாமம் ஸ்தோத்தரிக்கப்படுவதாக.
உம்முடைய உடன்படிக்கைக்காக நன்றி செலுத்தி உம்மை மகிமை செய்கின்றேன்.
நீர் என்றென்றும் மாறாதவராய் மகிமையென்னும் சிங்காசனத்தில் வீற்றிருக்கின்றீர்.
உம்முடைய ஒப்பற்ற கிருபையினாலே எங்களை இரட்சித்தீர்.
அதற்காக உம்முடைய ஒரே பேறான குமாரனையும் சிலுவையில் தந்தீர்.
எத்தனையோ முறை தீர்க்கதரிசிகளின் மூலமாக நீர் எச்சரித்தீர்!!
நாங்களோ அதை கேளாமல் போனோம். கிறிஸ்துவை மறுதலித்தோம்!
ஆனாலும் அவருடைய கிருபையினாலே மீட்டுக்கொள்ள பட்டோம்.
இறைவா உம்முடைய நாமம் எப்பொழுதும் உயர்த்தப்படுவதாக.
உமக்கென்றே நான் ஒரு எந்நாளும் சுகமாய் ஜீவித்திடுவேன்.
இயேசுவே என் மன பாரங்கள் யாவையும் உம்மிடம் தந்துவிட்டேன்.
லேசானவனாய் நான் உம்மை ஆராதிக்கின்றேன்.
இறைவா என் இரட்சகரே, என் நேசரே என் துணையாளரே
உம்முடைய நாமம் என்றென்றும் ஜீவனுள்ளதாய் வாழும்.
நாளை சீக்கிரமாய் மரித்து, பெயரற்றவனாய் மறைந்து போவேன்.
என் இயேசு அதற்குள்ளாக வந்தால் அவரோடு சென்றிடுவேன்.
இறைவா, என்னை இன்னும் பரிசுத்தப்படுத்தி தூய்மையாக்கும்.
தெய்வீக பிரசன்னம் என்னை என்றென்றும் சூழ்ந்திருக்கட்டும்.
உம்மை என்னில் பிரகாசிக்கப்பண்ணும், நான் பரிசுத்தம் பெறுவேன்.
உம்முடைய நீதியின் சூரியன் என் தலைமேல் உதிக்கச் செய்யும்.
பரிசுத்தமுள்ளவன் இன்னும் பரிசுத்தமுள்ளவனாகட்டும் என்ற வசனத்தை போல
என்னை மேன்மேலும் உம்முடைய அக்கினியினால் புடமிட்டு பரிசுத்தப்படுத்தும்
இயேசுவே என் தேவாதி தேவனே நீர் எந்நாளும் போற்றப்பட தக்கவர்.
உம் தூய வழியே எனக்கு என்றென்றும் மேன்மையானதாகவுள்ளது.
நீரென் அடைக்கலமும், நீரென் கோட்டையுமானவருமே!!
கர்த்தர் நீர் நல்லவர். ஒருபோதும் வாக்கு மாறாதவர்.
உம்முடைய தூய இரத்தத்தினால் என்னை கழுவி பரிசுத்தப்படுத்தும்.
என்றும் உம்முடைய நாமத்தின் மேல் நம்பிக்கையாக இருக்கச் செய்யும்.
நீங்க மாத்திரம் போதும் எனக்கு. நிலையில்லா இவ்வுலகம் எனக்கெதற்கு?!
உம்முடைய அநாதி ஸ்நேகத்தினால் நான் வாழ்வடைந்து பெலனடைந்தேன்.
காருணியமென்னும் கிருபையினால் நான் மீட்கப்பட்டு உயிர்பெற்றேன்.
உம்முடைய ஐசுவரியத்தினால் ஏழையான நானும் ஐசுவரியவானானேன்.
தாவீதின் தேவனவர் நீர்தானே! நீரே ஆபிரகாமின், ஈசாக்கின்
யாக்கோபின் உயிருள்ளவர்களின் தேவனாக இருக்கின்றீர்.
உம்மை தொழுதுகொள்ளும் நானும் என்றென்றும் உயர்வாய்வேன்.
ஜீவனைப் பெற்றுக் கொண்டு நித்தியத்தில் உம்மை ஆராதிப்பேன். ஆமென்.

08-09-09

என் ஜீவனை விட நான் நேசிக்கின்ற சர்வ வல்லமையுள்ள தேவன் நீரே!!
உம்மை நான் மிகவும் விரும்புகிறேன். உம் முகம் காண ஏங்கின்றேன்!
உம்மையே நான் நேசித்து ஆராதிக்கின்றேன். அன்பு செய்கின்றேன்.
அத்தகைய இதயத்தை நீரெனக்கு தந்தமைக்காக நன்றி சொல்லுகிறேன்.
என் இராஜனே என் தேவனே உம்மை நான் துதித்துப் பாடுகின்றேன்.
என் முழுமையும், என் வாழ்க்கையும் உம்மை ஆராதிப்பதில் தானே உள்ளது!?
சேனைகளின் கர்த்தர் பரிசுத்தர், பரிசுத்தர், பரிசுத்தர் என தொடங்கி,
பூமியனைத்தும் உம் மகிமையால் நிறைந்திருக்கின்றன என்று சொல்லுவேன்.
தூதர்களோடும், சகல பரிசுத்த வான்களோடும், தேவ தூதர்களோடும்,
இன்னிசைக்காரர்களோடும், தீர்க்கதரிசிகளோடும், நீதிமான்களோடும்,
நியாயாதிபதிகளோடும், இராஜாக்களோடும், ஆசாரியர்களோடும்
உம்மை நாள்தோறும் ஆராதித்து அகமகிழ்ந்து போற்றிப் பாடுவேன்.
என்னை முற்றிலும் பரிசுத்தப்படுத்தும் தேவா!! இணைப்படுத்தும் தேவா!!
உம்முடைய அகமளிக்கும் வல்லமை என்னில் கடந்து வரட்டும் நாதா!
நான் இவ்வுலகத்தில் உள்ள எல்லா ஆத்துமாக்களையும் உமக்காக
ஆதாயப்படுத்தி, உம்மிடத்தில் சேர்க்க விருப்பமாயுள்ளேன்.
இறைவா, அதற்காக எனக்கு பெலத்தை தாரும்!! வல்லமைத் தாரும்.
திறம்பட சத்தியத்தை சத்தியமாக பேச கிருபையளித்திடும்.
என் சொந்தத்தில் அல்ல, உம்மையறிந்து பேச உதவி செய்யும்.
இவ்வுலகின் காரியங்களை எனக்கு வெளிப்படுத்தும்.
சர்ப்பங்களை எடுக்கவும், பிசாசுகளை ஓட்டவும் அதிகாரம் தாரும்.
குருடர்கள் பார்வைபெறவும், முடவர்கள் நடக்கவும், மரித்தோர் எழும்பவும்
வியாதிகள் சுகமாகவும், தரித்திரர்களுக்கு சுவிசேஷம் அறிவிக்கவும்
இந்த பாத்திரத்தை எடுத்துப் பயன்படுத்தும். அதுவே என் வாஞ்சை.
ஆனாலும் அது என் சித்தத்தினால் அல்ல, பிதாவே உம் சித்தத்தின் படி செய்யும்
கருணையுள்ளவரே என் சிநேகிதரே உம்மையே நான் சிந்திக்கின்றேன்.
உம்முடைய பெரிய வல்லமையான சர்வ காரியங்களையும் நினைத்துப்பார்க்கவே,
நீர் ஒருவரே தெய்வம் என முற்றிலுமாக நம்புகிறேன்.
அதை நீரெனக்கு இயேசு கிறிஸ்துவின் மூலமாக தெரியப்படுத்தினீர்.
என் இயேசு மூலமாக நான் பிதாவை அறிந்துக் கொண்டேன்.
என் இராஜாதி இராஜா இயேசுவே என் குல தெய்வம்.
அவர் எங்கோ?! வந்தவொரு நாட்டவரோ பிறந்திருந்தாலும்
அவர் பிறந்து, வாழ்ந்து, ஜீவனைத் தந்தது எனக்காகவும், இந்த
உலக ஜனத்திற்காகவுமேயன்றி வேறெதற்காக!!?
இயேசுவே உம்மை நான் நித்தமும் அன்பு கூறுகின்றேன்.
என் சந்நிதிக்கு உம்மை நீர் தந்த பாக்கியம் நானே பாக்கியவான். ஆமென்.

09-09-09

என் ஜீவனிலும் மேலானவரே உம்மை நான் ஸ்தோத்தரிக்கின்றேன்.
ஆராதனைக்கு யோக்கியமானவர் நீர் ஒருவர் தானே நன்றி சொல்கிறேன்.
எனக்காக மரித்து, உம்முடைய விலையேறப்பெற்ற இரத்தத்தினால்
தூய்மையாக்கி பிதாவினிடத்தில் சேர பரிசுத்தமாக்கினீர்.
இயேசையா உந்தன் நாமம் என்றென்றும் மகிமைப்படுவதாக.
நீர் வாழ்க. கர்த்தருடைய நாமத்தில் வருபவரான நீர் ஸ்தோத்தரிக்கப்படத்தக்கவர்.
உம்முடைய கிரியைகளை எண்ணி என்னால் வியக்காமலிருக்க முடியவில்லை.
உம்முடைய சர்வ வல்லமையால் வானத்தையும், பூமியையும் சிருஷ்டித்தீர்.
உம்முடைய பரிசுத்த புயத்தினால் எல்லாவற்றையும் பரிசுத்தமாக்கினீர்.
உலகம் உம்மை அறிந்துக்கொள்ள வேண்டும். அதுவே நித்தமும் சமாதானம்.
இயேசு இரட்சகரே, உம்மை நான் என் கடின குரலால் பாடுகின்றேன்.
இனிமையான குரலில் உம்மை பாடவும் விரும்புகின்றேன்.
இறைவா, எனக்கு தெரிந்த பழியெல்லாம் உம் சமூகத்தில் காத்திருக்கின்றேன்.
எனக்கு பிரியமான தேவனான உம்மை எந்நேரமும் யோசனை செய்கின்றேன்.
உமக்கே ஆராதனை செய்து உம் நாமத்தை மகிமை செய்கிறேன்.
எந்நேரமும் உம்முடைய கிரியைகளின் நினைவிலே வாழ்கின்றேன்.
உம்முடைய கற்பனைகளை கைக்கொள்ள முயன்று வெற்றி பெற்று வருகின்றேன்
ஆண்டவரே, என் இயேசு இராஜனே உம் நாமம் உயர்த்தப்படணும்.
உம்முடைய இராஜ்ஜியம் இப்பூமியில் இறங்கி வர வேண்டும்.
உம்மை ஏற்றுக்கொள்ள இவ்வுலகம் தயாராக வேண்டும்.
என் ஆண்டவரே என் விருப்பமானவரே உம்மை நான் வாழ்த்துகின்றேன்.
இந்நாளிலும் என்னை நீர் பரிசுத்தப்படுத்திடும். நான் பரிசுத்தமாவேன்.
இறைவா உம்முடைய சக்தியினால் என்னை நிறைத்திடும்.
உம்முடைய மேலான கிருபையால் என்னை மூடிக்கொள்ளும்.
நீதியினால் இந்த பாத்திரத்தை நிரப்பி பயன்படுத்தும்.
நீரூற்று கனியைப்போல இந்த பாத்திரம் கனியுள்ள மரமாகணும்.
அப்பா, உம்மிலே நான் கொடியாக வளர்ந்து படரணும்.
உமக்கென்றே ஜீவித்து உம்மை சேவை செய்ய வேண்டும்.
வேதத்தின் இரகசியங்களை எனக்கு நீர் வெளிப்படுத்தணும்.
கற்பனைகளை, கட்டளைகளை ஆராய்ந்து அதன்படி வாழணும்.
இறைவா, தினந்தோறும் பிரகாரங்களில் நின்று உம்மை ஆராதிக்க வேண்டும்
தினம் தினம் சோர்வடையாமல் உம்மை சேவிக்க வேண்டும்.
பந்தயத்தில் வெற்றிபெற்றவனாய் முதலாமானவனாய் வர வேண்டும்
உம்முடைய இராஜ்ஜியத்தின் சுவிசேஷத்தை இப்பூமி முழுவதும் பரப்பிக்க வேண்டும்.
மகிமையையும், கனத்தையும், உமக்கே செலுத்த வேண்டும்.
உலகம் உம்மை அறிந்துக்கொள்ள வேண்டும். அல்லேலூயா!

10-09-09

என் மெய்ப்பரே என் சிருஷ்டிகரே என்னை மன்னியும் நான் பாவி.
என் மீறுதல்கள் எனக்கு முன்பாகவே இருக்கின்றன. நான் பாவி.
உம்முடைய கற்பனைகளை கைக்கொள்ளாதபடி சில நேரங்களில்
குருடனாக நான் ஆகி, பாவத்திற்கு அடிமை தந்துவிடுகிறேன்.
இறைவனே என் குருட்டுத்தன்மை என்னை விட்டு நீங்கிவிடுவதாக.
நான் பார்வையடையணும். உம்மிலே பிரியமானவனாக அடங்கணும்.
ஆண்டவரே என் துணையாளரே என் மீறுதல்களை எண்ணாதிரும்.
சிருஷ்டிகரே என் குற்றங்களை எண்ணிப்பாராதேயும்.
அது மிகுதியானவைகளல்லவோ இருக்கின்றன?!
கர்த்தரே என்னை காப்பாற்றும் கருணையின் தெய்வமே
உம் நாமம் உயர்த்தி உயர்த்தி என்னுள்ளம் மகிழ்ச்சியடைகின்றது.
அன்பே உருவான என் ஆண்டவரே என் ஆத்தும மணவாளனே
நான் ஒன்றுக்கும் உதவாதவன். என்னில் அன்பு இல்லை.
நல்ல குணங்கள் இல்லை. நல்ல எண்ணங்களும் இல்லை.
நல்ல சிந்தனைகளும் இல்லை. யாவும் இவ்வுலகத்துக்குரியவைகளாமே'.
இறைவா உமக்காக நான் நல்ல கனிதரும் மரமாகணும்.
இல்லையேல் எப்பொழுதே என் ஆவியை உம்மிடம் ஒப்புவிக்கிறேன்,
நான் இவ்வுலகத்தில் பிறந்ததற்கான ஒரு நோக்கம் உண்டு.
அது இயேசுவே, பிதாவே, பரிசுத்த ஆவியானவரை அறிவதே!!
இறைவா, என் நேசரே உம்மை நான் நேசித்து கனப்படுத்துகிறேன்.
என்மேல் பிரியமாய் இருப்பவர் நீர் மட்டும் தானே.
நீரே என்றென்றும் பெரியவராய் வலம்வருபவராய் இருக்கின்றீர்.
உம்முடைய இராஜ்யம் என்றென்றும் வாழ்ந்து கொண்டிருக்கிறது.
தாழ்விலிருந்து உண்டான என்னையும் நீர் தயவாய் நினைத்தருளினீர்
நான் வாழ்வை பெற்றுக்கொண்டேன். என்னில் நீர் குடியிருக்கின்றீர்.
என்னை இன்னும் பரிசுத்தப்படுத்தி உமக்கான பாத்திரமாக மாற்றும்.
நான் சிறுகவேண்டும். என்னில் நீர் பெருக வேண்டும்.
உம்முடைய கிருபையை என்னாளும் என்றென்றும் சிந்திக்க வேண்டும்
அப்பா தகப்பனே உம்மை நான் வாழ்த்திப்பாடி போற்றுவேன்.
எல்லையில்லா கிருபையினாலே உம்மை நான் அறிந்துகொள்ளணும்,
உம்முடைய மகிமையெல்லாம் சிங்காசனத்தில் நானும்மை ஆராதிக்கணும்.
எப்பொழுதும் ஆவியில் நிறைந்தவனாக காணப்பட வேண்டும்.
என் கைகள் தூய்மையானதாக இருக்க வேண்டும்,
நான் பரிசுத்தமாக ஜீவிக்க வேண்டும். பரலோகத்தை அடையணும்
அப்பா உம் பாதம் அமர்ந்து எந்நாளும் ஜெபம் செய்ய வேண்டும்.
உம்மை ஸ்தோத்திரம் செய்து புகழ்ந்து பாடுகிறேன். ஆமென். அல்லேலூயா.

என் தேவனே, அல்லேலூயா ராஜனே உம்மில் நான் பாக்கியமாகவுள்ளேன்.
உமக்குள்ளே நான் எந்நாளும் நன்றியோடு வாழ்ந்திடுவேன்.
இயேசுவே என்னை பரிசுத்தமாக்கிடும். இராஜனே என்னை புதிதாக்கிடும்.
எனக்குள்ளே பரிசுத்தமில்லாத காரியங்கள் அகன்று போய்விடட்டும்.
உம்முடைய இராஜ்யம் எவ்வளவு பெரியது என்று நான் அறிவேன்.
இறைவா, சாத்தானை ஆராதிப்பவர்கள் மனம்மாற வேண்டும்.
அவர்களுடைய சிறுமைகளை அவர்களை விட்டு அகன்று போகட்டும்.
இராஜா, எந்தவொரு ஆத்துமாவும் பிசாசிற்கு சொந்தமாகக்கூடாது.
அப்பனே, அவர்கள் மனம்மாற அவர்களில் நீர் கிரியை செய்யும் தேவனே!
உம்மை துதித்துப்பாடி அகமகிழ்ந்து களிகூர்ந்து நன்றி பலி செலுத்திடுவேன்.
அப்பனே உம்மை நான் வாழ்த்திப்பாடி போற்றி புகழ்ந்திடுவேன்.
இவ்வுலகம் உம்முடையது. நீர் படைத்தது. உமக்கே சொந்தமானது.
இறைவா, பிசாசினால் வஞ்சிக்கப்படும் ஜனங்கள் அநேகர்,
அவர்களையும் ஆண்டவரே உமது கிருபையால் இரட்சித்துக்கொள்ளும்.
இறைவா, என் இயேசுவே இவ்வுலகம் செய்யும் தீமை அபாயகரமானது.
இயேசப்பா, நான் சாத்தான் படி நடவாமலும், என் இருதயம் பொல்லாங்கில்
போகாமலும், சுய இச்சையின் படி இயங்காமலும்
உம்முடைய கட்டளைகளையும், கற்பனைகளையும் கைக்கொண்டு
நீதியின் படியும், நியாயத்தின் படியும், உண்மையாய் ஜீவிப்பேன்.
ஆண்டவரே என் அன்பு நேசரே உம்மை நான் விரும்புகிறேன்.
நீர் ஒரு வார்த்தை சொல்லும் நான் சுகமாவேன். சீர்பொருந்துவேன்.
பரிசுத்த ஆவியானவரே என்னில் பிதாவின் சித்தம் நிறைவேறட்டும்.
இயேசுவே உமக்குள்ளே நான் நன்றியோடு இருப்பேன்.
என் இருதயம் பொல்லாங்கானவைகளை சிந்திப்பதென்ன?!
என் நினைவுகள் யாவும் தீங்கானவைகளாக இருப்பதென்ன!?
ஆம் நான் தாழ்வாயிருந்து உண்டானவன். பிசாசின் மகனாயிருந்தேன்.
ஆனாலும் இயேசுவின் இரட்சிப்பினால் நான் மீட்கப்பட்டேன்.
பாவம் என்னை நெருங்கி வந்தாலும், பரிசுத்த ஆவியினால் ஜெயிப்பேன்.
சத்தியத்தை கையிலே ஆவியெனும் ஆடையைத் தரித்துக்கொண்டு
ஆயுதங்களை அணிந்துக்கொண்டு போருக்கு புறப்பட்டு போவேன்.
அழகானவரே என் அழகு நேசரே உம்மை புகழ்கின்றேன்.
நீர் மாத்திரம் எனக்கு போதும், வேறென்ன எனக்கு வேண்டும்!!
ஓ மானிடமே நீ தேவனின் வார்த்தைகளுக்கு செவிகொடு!
அவருடைய வார்த்தைகளுக்கு கீழ்ப்படிந்து நட. நீ பிழைப்பாய்.
தேவா உம்முடைய சகல நன்மைகளையும் நான் நினைத்து போற்றுவேன்
உம்மை நான் வாழ்த்தி என்றென்றும் பாடி புகழ்ந்திடுவேன்.

12-09-09

என் ஆத்துமாவே என் முழு உள்ளமே கர்த்தரை ஸ்தோத்தரி.
அவர் செய்த சகல உபகாரங்களை என்றென்றும் மறவாதே.
அவர் செய்த நன்மைகளை எண்ணி நாள்தோறும் அவர் புகழ் பாடு.
அவருக்கிணை எந்தவொரு இறைவனும் இல்லை. அவரே ஜீவனும் என் பெலனுமானார்.
ஆண்டவரான இயேசு கிறிஸ்து சர்வ வல்லமையுள்ள தேவன்.
அவரில் இருந்த தாழ்மையைப்போல நீயும் உன்னை தாழ்த்து.
மெய்யாகவே அவர் தேவனுடைய குமாரன் என்று எப்பொழுதும் அறிக்கை செய்
பிதாவின் வலது பாரிசத்தில் வீற்றிருக்கின்ற தேவனை ஸ்தோத்தரித்துப் பாடிப் போற்று
அவருடைய பொறுமையைப் போல நீயும் அவருக்காய் பொறுமையாய் காத்திரு.
அவருடைய எல்லையில்லா கிருபையினாலே உன்னை இரட்சித்தார் என்று நன்றி செலுத்து.
தேவ பெலனும், தேவ வசனமும் என்றென்றும் உன்னில் தங்கியிருக்கட்டும்.
அப்பா நீர் அதிசயமானவர். ஆலோசனைக் கர்த்தர். ஆசீர்வதிக்கப்பட்டவர்.
உம்மிலே எந்தவொரு பாவமும் இல்லை. நீரே சர்வ வல்லவரானவரே!!
இறைவா உம்மை நான் எந்நாளும் போற்றிப் பாடி மகிமைப்படுத்துவேன்
இறைவா என்னிலே உம்முடைய குணநலன்கள் குடிகொள்ளட்டும்.
நான் உமக்கு பிரியமானவனாக என்றென்றும் வலம் வர வேண்டும்.
இறைவா, நான் சிறுக வேண்டும் நீர் பெருக வேண்டும்.
என் மாம்சம் தாழ்ந்து போகவும், என் ஆவி உயிர் பெற வேண்டும்.
என் ஆத்துமா உம்மையே நம்பியிருந்து உம்மிடத்தில் சேரணும்.
இறைவா உம் ஜீவநதியில் நான் ஒவ்வொரு நாளும் மூழ்கணும்.
உம்முடைய அக்கினியினால் நாள்தோறும் பரிசுத்த மாக்கப்பட வேண்டும்.
இராஜாவே உம்முடைய இராஜ்ஜியம் இப்பூமியில் வர வேண்டும்.
அன்பும் சமாதானமும் இப்புவியில் வலம் வர வேண்டும்.
நோய், கொள்ளை யாவும் போய் இரக்கம், தயவு குடியிருக்க வேண்டும்.
வாழ்வில் ஒரு புதிய பரிமாணத்தை நான் காண வேண்டும்.
அது உம்மை, உம் நாமத்தை மகிமைப்படுத்தும் படியாக இருக்க வேண்டும்.
உம்முடைய அழகான பரலோக சமாதானம் எங்கள் இருதயங்களில்
பிரவேசித்து உம்மை எந்நேரமும் ஆராதித்துக் கொண்டிருக்க வேண்டும்.
என் இயேசு தேவன் நீர் மாத்திரம் எனக்கு போதுமென்பேன்.
ஆராதனைக்குரியவர் உமக்கே என் ஆராதனை.
இடுக்கண் பழியிட்டு உம் பிரசன்னத்தை நான் வாஞ்சிப்பேன்.
சித்திரம் அழகானவர் நீர் மாத்திரம் எனக்குப் போதுமே!
உமக்கு பிரியமான, பரிசுத்தமான மணவாட்டியாக என்னை மாற்றிடும்.
இறைவா எல்லாம் வல்லவரான உம்மை நான் தொழுதுக் கொள்கிறேன்
நீரே பெரியவர். சர்வத்திற்கும் வல்லவர் உம்மை நான் தேடுகின்றேன்.
உம் தூய நாமத்தை வியந்து நான் போற்றிப் பாடுகின்றேன்

13-09-09

★

என் உயிரிலும் மேலான என் இயேசு மகா இராஜனே, ஸ்தோத்திரம்.
உம்முடைய நன்மைகளுக்காக எந்நாளும் உமக்கு நன்றிபலி செலுத்துகிறேன்
தேவாதி தேவனே. உம்முடைய இரட்சிப்பின் நிமித்தம் எத்தனை ஆத்துமாக்கள்
காப்பாற்றப்பட்டு, பிசாசின் பிடியிலிருந்து விடுவிக்கப்பட்டுள்ளனர்?
அதில் என் இடமும் ஒன்றல்லவோ? அதில் நானும் உண்டல்லவோ?!
அப்பா பிதாவே, உம்முடைய ஒரே பேறான குமாரனை எனக்குத் தந்தருளினீர்.
உம்முடைய அன்பு எங்கள்மேல் எவ்வளவாய் பெருகியிருந்திருக்கிறது.
ஆதியில் நீர் எவ்வளவு எரிச்சலுள்ள தேவனாக இருந்திருப்பினும்
அநேகதரம் இஸ்ரவேலின் மேல் அன்பு கொண்டவராகவே இருந்தீர்.
ஆனால் உம்முடைய மகனை எங்களுக்காக தந்ததின் நிமித்தம்
உம் அன்பைக் காட்டிலும் பெரிதான அன்பு இவ்வுலகில் இல்லையென்று அறிந்தேன்.
அப்பா பிதாவே, உம் மகன் இயேசு கிறிஸ்துவானவர் பூதராக இங்கும்
இப்பூமியில் உமக்கு முன்பாக எவ்வளவு தாழ்மையாக இருந்தார்?!
அவரிடத்தில் பெருமை ஒருபோதும் இருந்ததில்லை. பெருமிதம் அடைந்ததில்லை.
எல்லா தருணத்திலும் உம் சித்தம் செய்யவே உறுதி பூண்டிருந்தார்.
இறைவா அது போலவே நானும் இருக்க விருப்பம் கொள்கிறேன்.
என்னில் ஒருபோதும் பெருமையின் ஆவி பற்றிக்கொள்ளாமல் இருப்பதாக.
நான் எக்காலத்திலும் தாழ்மையுள்ளோனாய், உண்மையாய் ஜீவிப்பேனாக!.
எல்லாவற்றிற்கும் மேலாக உம் சித்தம் செய்யவே விருப்பம் கொண்டிருப்பேனாக!
ஆராதனைக்குரியவர் நீரே, உமக்குள் ஒருபோதும் பேதமில்லை!!
பக்ஷபாதமில்லை. பாரபட்சமில்லை. கூடாதது ஒன்றுமிருக்க வில்லை.
அப்பா பிதாவே என் அன்பான தேவா சர்வ சிருஷ்டிகரே நீர் வாழ்க
உம்முடைய நாமம் எல்லா நாமத்தைக் காட்டிலும் பெரிதான நாமம்.
உம்முடைய இராஜ்யமே எல்லாவற்றிலும் மேலான இராஜ்யம்.!!
அந்த பரலோக இராஜ்யத்திலே, ஜீவ புஸ்தகத்திலே என்னுடைய பெயரும்
இருப்பதற்காக உம்மை நான் ஸ்தோத்தரிக்கின்றேன்.
இராஜாதி இராஜனே! என் தேவாதி தேவனே நீர் பெரியவர்!
நான் என்றும் தன்னலம் என்னிலிருந்து ஒழிய வேண்டும்.
பொதுநலம் பேணி எல்லாருக்காகவும் வாழ்ந்து ஜீவன் பெற வேண்டும்
இராஜனே உலகத்திற்கும் உமக்கும் இனித்திடும் மகனாக வாழ வேண்டும்
மக்கள் ஊழியம் செய்து உம்மிலே நிலைத்திருக்க வேண்டும்.
உம்முடைய பிரசன்னத்திலே அமர்ந்து காத்திருக்க வேண்டும்.
அன்பே உருவான என் சர்வ வல்லமை மிக்க தேவா நீர் வாழ்க.
நீர் சீயோனில் வாசமாய் இருக்கின்றீர். இதோ என்னை நோக்கும்.
இறைவா உம்முடைய மேன்மைகளை உயர்த்தி நான் பாடுகின்றேன்
நீர் சர்வ வல்லமையுள்ள தேவன். ஆமென். அல்லேலூயா.

14-09-09

என் இராஜனே, என் மேய்ப்பனே உம் நாமம் போற்றப்படுவதாக.
உம்முடைய சித்தம் இப்பூமியில் நிறைவேறுவதாக.
உம்முடைய கண்கள் நீதிமான்களை நோக்கி பார்க்கின்றது.
துன்மார்க்கரை நீர் அழிக்கின்றீர். ஆனாலும் நீர் அன்பாகவே இருக்கின்றீர்.
எல்லாரையும் நேசிக்கும் தெய்வம் நீர் மாத்திரமே. நீரே தேவன்.
ஆமா. இன்றுமுதலாக நேற்று. இந்த தோகா பட்டணத்தில்
உம்முடைய ஊழியம் செய்ய வழி திறந்ததைக்காக ஸ்தோத்தரிக்கின்றேன்.
கர்த்தர் நீர் பெரிய காரியங்களை செய்வீராக. நீர் மாத்திரம் பெரியவர்.
இறைவா நீர் எங்களோடு மாத்திரம் இல்லாவிட்டால் நாங்கள் ஒன்றும் செய்ய முடியாது!
கர்த்தாவே உம்முடைய அரணிப்பான கோட்டையில் எங்களை பாதுகாத்திடும்.
நாங்கள் துன்மார்க்கத்தின் மத்தியில் ஜீவித்து வருகிறோம்.
இறைவா, என் நேசரே உம் நாமம் என்றென்றும் போற்றப்படுவதாக.
அப்பா உம்முடைய ஊழியத்தை இன்னும் உற்சாகத்தோடு செய்ய வேண்டும். ம்
உமது ஊழியம் செய்ய உம்முடைய பெலமே எனக்கு அவசியம்.
என் மாம்சம் பெலவீனமானது. உம்முடைய ஆவியே உற்சாகமுள்ளது.
அப்பா உம்முடைய பரிசுத்த நாமத்திற்கே மகிமை உண்டாவதாக. ன்
ஆண்டவரே, முற்றிலும் மெய்யான என் அக்கினிமயமான தேவனே
உம்முடைய அக்கினிமயமான விரல்களினால் என்னைத் தொட்டருளும்.
அதனால் என் இருதயத்தில் உம்முடைய வார்த்தைகளை பதியச்செய்திடும்.
இராஜாதி இராஜனே, என் ஜோதி தேவனே நீர் போற்றப்படுவீராக.
உம்முடைய மெய் வழிகளில் நான் நடக்க விருப்பமாயிருக்கிறேன்.
உம்முடைய பாத்திரமாக இருக்கவே நான் ஆசைப்படுகிறேன்.
உமக்கு கீழ்ப்படிதலுள்ள மகனாகவே இருக்க வாஞ்சையாய் உள்ளேன்.
இறைவா உம்முடைய மெய்யின் வல்லமையால் நிரப்பிடும்.
நல்ல கனிகளைத்தர எனக்கு உதவி செய்யும். இருக்கிறேன்
நான் ஆராதிக்கின்ற தேவன் இன்னார் என்று அறிந்தும், விசுவாசித்தும்
அப்பா மீண்டுமே உம்முடைய மகனான இயேசுவைப்போல வாழவும்.
பரிசுத்தமாக ஜீவித்து உம்முடைய சித்தத்தை நிறைவேற்றவும்.
இராஜனே, என் தேவனே உம்முடைய மகிமையை நான் காண வேண்டும்
பரலோகத்தை தரிசிக்க வேண்டும். பரம இரகசியங்களை அறியவும்.
உமக்கு பிரியமானதை செய்ய வேண்டும். உம்மை உயர்த்தவும்.
நான் தாழ்ந்துபோகவும். என்னில் உம் இனம் பெருகவும்.
உம் நாமம் என்றும் பெருகி பெரிய இராஜ்யமாகவும்.
ஆண்டவரே உம்முடைய எண்ணிலடங்கா கிருபைகளுக்காக நன்றி.
நான் அறிந்த என் சர்வ வல்லமையுள்ள தேவனை
இவ்வுலகம் முழுவதும் அறியவும், உம்மை நேசிக்கவும். ஆமென்.

15-09-09

ராஜாதி ராஜனே, என் ஜோதி தேவனே உம்மை நமஸ்கரிக்கின்றேன்.
வாழ்வைத் தரும் வசனங்களை கொண்டிருக்கும் என் இயேசு நாதரே.
உம்மை நன்றி பலியாலும், ஸ்தோத்திர பலியாலும் நான் போற்றுகிறேன்.
ஆண்டவரே உம்மேல் நான் அநாதி பிரியம் கொண்டிருக்கிறேன்.
அதைக்காட்டிலும் நீர் என்மேல் வைத்த அன்பும், பிரியமும் விலையேறப்பெற்றது.
உம்முடைய ஒரே பேரான குமாரனென்றும் பாராமல் எனக்காக ஒப்புத்தந்தீர்.
புரோகிதர்கள் அவரை அவமானப்படுத்தி, சிலுவையில் அறைந்தார்கள்.
பிதாவே ஏன் அவரை கைவிட்டீர் என்று கேட்க எனக்கு துணிவில்லை.
ஏனெனில் இப்பிரபஞ்சம் உருவாகும் முன்னே அதுவே உம் திட்டமாயிருக்கிறது.
ஆராதனைக்குரியவரே என் ஆத்தும மணவாளரே உம்மை நேசிக்கின்றேன்.
உம்முடைய கிருபை எல்லாவற்றிலும் மேலானதாக உள்ளது.
இயேசப்பா உமக்கு கோடான கோடி ஸ்தோத்திரம் உண்டாகட்டும்.
என்னோடு கூடவே இருக்கிற என் பிதாவின் பரிசுத்த ஆவியானவரே
எனக்கு சத்தியத்தை சொல்லித்தாரும். மனக்கண்களை திறந்தருளும்.
என் விசுவாச பயணத்தில் ஒரு மைல்கல் தாண்ட உதவி செய்யும்.
தாழ்மையை எனக்கு கற்றுத்தாரும். இயேசுவைப் போல என்னை மாற்றும்.
பரிசுத்த வாழ்க்கை வாழ எனக்கு கிருபை செய்யும்.
உமக்காக எரிந்து ஜொலிக்க என்னை புடமிட்டு பரிசுத்தமாக்கும்.
ஆவியின் வரங்களினால் என்னை நிரப்பிடும். கனிதர உதவி செய்யும்
என் கோப தாபங்களை என்னை விட்டகற்றி தூய்மையாக்கும்.
என் இருதயத்தில் சுத்தமானவைகளையே சிந்திக்க உதவி செய்யும்.
உம்முடைய பெலத்தினால் என்னை இடைக்கட்டி செம்மையாக்கும்.
நித்திய ஜீவனை சுதந்தரித்துக்கொள்ள என்னை வழிநடத்தும்.
மலையையும் அதின் வழியே நடக்க உதவி செய்யும்.
இராஜா உம்முடைய பிரசன்னத்தினால் என்னை நிறைத்துவிடும்.
என் ஆத்தும நேசரே, உம்முடைய ஒளியால் என் முகம் பிரகாசிக்கட்டும்
உம்மை நான் ஆவியோடும், உண்மையோடும் ஆராதித்திடுவேன்.
உம்முடைய கற்பனைகளை கைக்கொண்டு உம் சித்தம் செய்திடுவேன்
ஆண்டவரே என்னை உமக்கு பிரியமான மகனாக மாற்றிடுமே!
நான் ஒன்றுமில்லை. நீரே பெரியவர். உம் நாமம் பெருகுவதாக.
அழிந்து போகும் என்னுடல். அழியாமையை தரித்துக்கொண்டேன்.
இறைவா உம்முடைய பரிசுத்தமும்; பிரசன்னமும் பூமி முழுவதும் நிறைவதாக
உம்முடைய அக்கினி ஒவ்வொருவர் மேலும் விழுவதாக.
உம்முடைய அன்புக்கரம் ஒவ்வொருவரையும் தாங்குவதாக.
உம் திருநாமம் எல்லோராலும் போற்றப்பட்டு உயர்த்தப்படுவதாக.
ஆராதனைக்குரியவர் நீர் ஒருவர் தானே. ஆமென். அல்லேலூயா.

16-09-09

என் உயிரினும் மேலான என் அன்புத் தந்தையே உம்மை ஸ்தோத்தரிக்கின்றேன்.
எல்லா தேவர்களிலும் மேலான தெய்வமே, என் சிருஷ்டிகரே நீர் வாழ்க.
உம்முடைய துதியை நான் நாள்தோறும் சொல்லி வருவேன்.
உம்முடைய ஆலயத்திற்கு பக்தியோடு நான் வந்திடுவேன்.
உமக்கு பயந்து உம்முடைய வார்த்தைகளுக்கு நான் கீழ்ப்படிவேன்
உம்முடைய இராஜ்யத்தையே என் நோக்கமாக கொண்டு செயல்படுவேன்.
என் நாவில் தீய சொற்கள் புறப்படாதிருக்கட்டும்.
பிறர் மனதை புண்படுத்தாதபடி என் வாயின் வார்த்தைகள் அமையட்டும்
பிறர் ஆறுதலடைகின்ற வார்த்தைகளால் என் வாயை நிரப்பிடும்.
அப்பா உம்முடையதிலிருந்தே எடுத்துப் பேச நான் ஆசைப்படுகின்றேன்
உம்மை நேசிப்பதைப்போல பிறரையும் நான் நேசிக்கணும்.
என் கண்கள் உம்முடைய மகிமையை காண வேண்டும்.
பரலோகத்தை நான் தரிசிக்க வேண்டும். ஆமென்.
எல்லோருக்கும் கனிதருகின்ற மரமாக நான் வளரணும்.
சுவைதரும் இனிமையான கனியாக அது இருக்க வேண்டும்.
இராஜாதி இராஜாவை எந்நாளும் நான் போற்ற வேண்டும்.
கர்த்தாதி கர்த்தரை எந்நாளும் நான் தரிசிக்க வேண்டும்.
தேவாதி தேவனை எந்நேரமும் என்னில் கொண்டிருக்க வேண்டும்.
உம்மோடு நான் நடக்க வேண்டும். நீரும் என்னுடன் இருக்க வேண்டும்.
கருணையுள்ள தேவனே என் குருநாதியே நீர் வாழ்க.
உம்மிலே எந்நாளும், இவ்வுலக முடிவுபரியந்தம் நிலைத்திருக்க வேண்டும்.
உம்மை விசுவாசித்து அந்த விசுவாச பாதையில் பின்தொடரணும்.
உம்முடைய வார்த்தைகளுக்கு நான் கீழ்ப்படிந்து தாழ்மையடையணும்.
உம்முடைய அன்பை நான் நாள்தோறும் ருசிக்கணும்,
உம்மை நான் பல பாடல்களில் வாழ்த்திப் பாட வேண்டும்.
ஆவியோடும், உண்மையோடும் உம்மை ஆராதிக்க வேண்டும்.
உம்முடைய நீதியை என் கவசமாக நான் அணிந்திருக்க வேண்டும்.
பரிசுத்த ஆவியானவர் என்னில் குடியிருக்க வேண்டும்.
நான் ஒவ்வொரு நிமிடமும் பரிசுத்தமாக்கப்பட வேண்டும்.
தியாகி தயவரை நான் நன்றியோடே துதிக்கணும்.
இவையெல்லாம் உம்முடைய உதவியில்லாமல் நான் பெற முடியாது.
இயேசுவே உம்முடைய கிருபையில்லாமல் நான் பெற்றுக்கொள்ள முடியாது.
பரிசுத்த ஆவியானவரே உம்முடைய ஆலோசனை இல்லாமல் பெற முடியாது;
பிதாவே உம்முடைய சித்தமில்லாமல் நான் அதை உம்மிடமிருந்து பெற முடியாது.
ஆண்டவரே எனக்கு உதவி செய்யும். ஆலோசனை சொல்லும்,
என்மேல் கிருபையாய் இருந்து உம் சித்தம் நிறைவேற்றும். ஆமென்.

17-09-09

என் இயேசுவுக்கே எல்லாப்புகழும், மகிமையும், கனமும் உண்டாவதாக.
இராஜாதி இராஜனாம் என் இம்மானுவேலே தேவாதி தேவன்.
அவரே என்னை இவ்வுலகில் மிகுதியாக அன்பு கூர்ந்திருக்கிறார்.
என்னை மிகவும் அழகாகவும், அவருடைய சாயலாகவும் படைத்திருக்கிறார்.
இவ்வுலகை பார்க்கின்றேன். அவை எத்தனை அழகாக உள்ளன.
அவையெல்லாம் பிதாவானவர் தம்முடைய வார்த்தையாலே படைத்தார்.
இவ்வுலகின் இயற்கையும், மரம், மச்சம், பறவை, விலங்குகள் யாவை
தனித்தனியே ஜோடி ஜோடியாக நேர்த்தியாக படைத்துயிருக்கிறார்.
ஆண்டவரே அள்ள அள்ள குறையாத என் அதிசயமே நீர் வாழ்க.
உம்முடைய சிருஷ்டிப்பை நான் எண்ணி வியக்கின்றேன்.
இவ்வுலகிலும், இப்பிரபஞ்சத்திலும் நான் காண்பதற்கு எம்மாத்திரம்?!
அனைத்தும் உம்முடைய கண்களில் எனக்கு கிருபை கிடைத்துள்ளதே!
என் உயிரினும் மேலான என் இயேசு கிறிஸ்துவே நீர் ஆசீர்வதிக்கப்பட்டவர்
உம்மை நான் என் உள்ளத்திலிருந்து துதிசெய்து ஆராதிக்கின்றேன்.
என் ஆத்தும நேசர் நீரே, என் வாழ்வின் அதிபதியும் நீரே!
எனக்கு மிகவும் பிடித்த பரம்பொருளே உம்மை நான் நேசிக்கின்றேன்
இறைவா நீர் முடிவில்லாதவர். உம்முடைய வெளிச்சம் அணையமுடியாதது.
உம்முடைய ஆற்றல் கணக்கிட கூட முடியாதபடி மிகுதியாயிருக்கிறது.
ஆராதனைக்குரியவரே என் ஆத்தும நேசரே நீர் வாழ்க!!
உம்மிடத்திலே உள்ள வல்லமை எத்தனையெத்தனை மிகுதி.
இறைவா, என்னில் ஒரு புதிய பரிணாமத்தை உண்டு பண்ணும்.
உம்முடைய அன்பை மிகுதியாக கொண்டிருப்பவனாக என்னை மாற்றும்.
ஆராதனைக்குரியவர் நீரே, நீரொருவரே என்றென்றும் போற்றப்படத்தக்கவர்
நீரின்றி நான் ஒன்றுமே செய்யக் கூடாதே! உம்மாலே எல்லாம் கூடும்
என் இரட்சகரே, என் தேவனும் பெலனுமானவரே நீர் வாழ்க.
உம்முடைய வழிகளை எனக்கு போதித்ததற்காக நன்றி சொல்லுகிறேன்.
என் இயேசு ராஜா. என் ஜோதி மயா நீர் வாழ்க.
உம்முடைய நாமம் பெருகட்டும். நான் தாழ்ந்து போவேனாக!
மண்ணோடு மண்ணாகும் என்னையும், என் ஆத்துமாவையும்
நீர் அன்பு கூர்ந்து மிகுதியாக நேசித்ததன் காரணமாகவே
உம்முடைய ஒரே பேறான குமாரனென்றும் பாராமல் ஒப்புக்கொடுத்தீர்
அவரோ இவ்வுலகத்தை உம்முடைய சித்தத்தின் படி செய்தார்.
அவரை நீர் உயிரோடு எழுப்பி, உமது வலதுபாரிசத்தில் அமர்த்திக்கொண்டீர்
தேவாதி தேவனே, முற்றிலும் அழகான என் நன்மையானவரே
உம்மை நான் எப்பொழுதும், எந்நாளும் மறவேன்.
உம்மை நான் மறந்தால் நான் ஒரு ஜீவனல்லவே. ஆமென்.

19-09-09

என் வேதனைக்கு அரணானவர் என் இயேசு கிறிஸ்து.
அதனால் யாருக்கும் நான் அஞ்சமாட்டேன்.
என் இரட்சிப்பும், பெலனுமானவர் அவர் ஒருவரே
ஆகையால் எதற்கும் நான் பயப்படமாட்டேன்.
என்னோடு கூட என்றாலும் இருப்பேனென்று வாக்குத்தத்தம் தந்தவர் நீரே!
எனக்கு பிரியமானவர் நீரே என்று என்னிடத்திலுள்ள பயங்களையொன்றை
நான் சொல்லி அவருக்கு மிகவும் பிரியமானவனாக மாற்றிட வைக்கவே.
தேவனோடு கூட நடக்க எனக்கு வாஞ்சையும், விருப்பமுமாம்!
என் ராஜனே, என் சிநேகிதரே என் தேவாதி தேவனே
உம்மைப் போல எனக்கு வேறுயாருண்டு என்னை நேசிக்க!!
என்னை எதிர்த்து சத்துரு வரும்போதெல்லாம் காப்பாற்றினவர் நீரே!
என் இயேசு மணவாளனே, உம்மை நான் விரும்புகிறேன்.
என் இருதயத்தை உம்முடைய இரத்தத்தாலே கழுவி சுத்திகரியும்.
என் பாவங்களை ஒருபோதும் எண்ணிப்பாராதேயும்.
என் வேதனை எண்ணிக்கையானால் அது கடற்கரை மணலத்தனையாய் உள்ளதே!
ஆண்டவரே என்னை ஆள்பவரே உம்மைப்போற்றித் துதிக்கின்றேன்.
என்னைக் கண்ணின் மணிபோல காப்பாற்றி வருகின்றீர்.
என்னை எல்லாத் தீமைகளிலிருந்து காத்து புது வழியைத் திறக்கின்றீர்.
நீரே என் அடைக்கலமும் பெலனுமானவராய் வலம் வருகின்றீர்.
என் இயேசு ராஜனே, என் இரட்சகரே ஜோதியே!!
சத்திய தேவனே, சர்வலோகாதிபதியானவரே நீர் வாழ்க வாழ்கவென்பேன்
உம்மையன்றி இவ்வுலகில் வேறெதுவுமில்லை. நீரே பெரியவர்.
உம்மை நான் நமஸ்கரிக்கின்றேன். இவ்வுலகை இரட்சியும் தேவா!
பாவத்திலுள்ளோரை விடுவியும் நாதா?!. நீரே சர்வ வல்லவர்.
உமக்கே எல்லாத் துதி, கனம் மகிமை உண்டாவதாக. ஆமென்.
இயேசு கிறிஸ்துவே, என் ஆத்தும நேசரே நீர் வாழ்க.
உம்முடைய அதிசயங்கள் சொல்லி முடியாதது. நீர் வாழ்க.
என்னை கண்ணின் மணிபோல காப்பவர் நீரே!
இவ்வுலகின் இரட்சகரும் நீரே. நீரே எங்களோடு கூட இருப்பவர்.
ஆம், எனக்கு உம்முடைய சத்தியத்தை போதிப்பீராக.
யெகோவா யீரே எனக்கு வேண்டிய எல்லாவற்றையும் நீர் பார்த்துக்கொள்வீர்
உம்முடைய இராஜ்ஜியத்தில் நான் சேர கிருபை தந்தருளும்.
ஆராதனைக்குரியவரே, என் ஆருயிர் நேசரே நீர் வாழ்க.
உமக்கே எல்லாத் துதி கனம் மகிமையும் உண்டாயிருப்பதாக.
எனக்குரிய பங்குமானவர், சுதந்தரம், எல்லாம் நீரே!
உம்முடைய ஆவியினால் என்னை நிரப்பிடுமப்பா. ஆமென்.

20-07-07
1:25 P.M

இன்று என் ஜெபங்களுக்கு பதில் கிடைத்த நாள்....

தேவன், என்னுடைய ஜெபிக்கப்பட்ட எல்லா விண்ணப்பங்களுக்கும்
பதில் தந்த இந்த நாள் 21-07-07 மணி 12:30 P.M.
தேவ தூதனை எனக்காகவே இந்தியாவிலிருந்து அழைத்து வந்திருந்தீர்!!
நான் இத்தனை நாட்களும் எழுதி எழுதி ஜெபித்த விண்ணப்பங்களுக்கு
இன்றைக்கு பதில் தந்து தெளிவாய் நீர் நிரூபித்தீர்.
ஜெபங்களை கேட்கின்ற தேவன் நீரென் துணையாய் இருக்கின்றீர் நலம்.
இன்னும் என்னை பொறுமையோடே இருக்கச் செய்கின்றீர் நன்றி.
நான் பொறுமையிழக்காமல் காத்திருக்க எனக்கு உதவி செய்யும்.
தேவா உம்முடைய சால்வையை என்மேல் போர்த்தியுள்ளீர்.
உம்முடைய இரட்சண்யத்தால் என்னை உடுத்திக் கொண்டீர்.
இறைவா, உம் கிருபைகளுக்காக நான் ஸ்தோத்திரம் செய்கின்றேன்.
இயேசையா இனி நான் உம்மிடம் என்ன கேட்கப் போகிறேன்.
நான் என்ன எழுதப் போகிறேன். நானறியேன். நீரே அறிவீர்.
எனக்கு நல்ல யோசனை சொல்லும்! இறைவா உம்மை மகிமைபடுத்துவேன்.
உம்மை கனம் செய்ய வேண்டும். நான் சிறுமைப்பட்ட தேசத்திலே
என்னை உயர்த்தப் போகிறதற்காக உமக்கு நன்றி சொல்கிறேன்.
இறைவா, உம்முடைய வார்த்தைகளுக்காக நான் இனி ஜெபிக்கப்போகிறேன்.
உம்முடைய வார்த்தைகளை என் இருதயத்தில் எழுதப்படும் வரை ஜெபிப்பேன்.
இறைவா உம்மை உயர்த்தி ஸ்தோத்தரித்து உம்மை புகழுவேன்.
எத்திசையில உம்மை துதி செய்து மகிமைப்படுத்துவேன்.
இறைவா, இனிமேல் எழுதக்கூடிய விண்ணப்பங்களுக்கும் பதிலை தருவீர்,
என்று விசுவாசித்து எப்பொழுதும் போல ஜெபிக்கிறேன்.
இராஜாதி இராஜனே, ஜோதி தூயனே நீர் வாழ்கவென்று வாழ்த்துவேன்.
எல்லாவற்றிற்காகவும் உமக்கு நன்றி சொல்லி புகழுவேன்.
அன்றைக்கு உம்முடைய சத்தத்தை கேட்கப் பண்ணினீர் நன்றி!
இன்றைக்கு உரைத்த எல்லா தீர்க்க தரிசனங்களும் எனக்கே உரைக்கப்பட்டது.
இறைவா உம்முடைய வார்த்தைகளை கைக்கொள்ள கிருபை அளித்திடும்.
உம்முடைய ஆசீர்வாதத்தை பெற்றுக்கொள்ள உதவி செய்யும்.
இறைவா, உமக்கு இன்னும் பிரியமானவனாக மாற உதவி செய்யும்.
ஏனோக்கு, எலியா, நோவாவைப் போல உம்மோடு நடக்கச் செய்யும்.
மோசேயைப் போல உம்மை தரிசிக்க கிருபை செய்யும்.
தாவீதைப்போல உமக்குப் பிரியமானவனாக வாழ உதவி செய்யும்.
சாலமோனைப்போல ஞானத்திலே பெருக பெருகிடச் செய்யும்.
பவுலைப்போல பரலோகத்தை தரிசிக்க எனக்கு உதவிடும்.
பேதுருவைப் போல தைரியங்கொண்டு பிரசங்கம் செய்ய உதவும்.
இயேசுவைப்போல உம் மகனாக என்னை என்றும் மாற்றும். ஆமென்.

22-09-09
10:20 A.M

இறைவா உம்முடைய நாமத்திற்கு ஸ்தோத்திரம் செலுத்துகின்றேன்.
உம்முடைய அன்பிற்காக நன்றியும், துதியையும் ஏறெடுக்கின்றேன்.
இராஜாதி இராஜனே, தேவனே தேவகுமாரனே நீர் வாழ்க.
வானாதி வானங்களை படைத்தவரே உமக்கு ஸ்தோத்திரம்.
அதிலே பகலை ஆள சூரியனைப் படைத்தீரே உமக்கு ஸ்தோத்திரம்.
எண்ணிலடங்கா நட்சத்திரங்களை அதிலே வைத்தவரே உமக்கே ஸ்தோத்திரம்.
பூமியை ஜீவனுள்ளவைகளுக்காக படைத்தவரே உமக்கு ஸ்தோத்திரம்.
காற்றையும், கடலையும் படைத்து, அதினை அடிமைப்படுத்தினீரே ஸ்தோத்திரம்.
ஆறாய் மலை பெரியபெரிய அதிசயங்களை நீர் ஸ்தாபித்தீரே ஸ்தோத்திரம்.
பறவைகள், மரங்கள் நீர் படைத்த சிறப்புப் பெருமக்கு ஸ்தோத்திரம்
விலங்குகள், காட்டு மிருகங்கள், வீட்டு மிருகங்கள் உண்டாக்கினவரே!!
உம்மை நான் ஆராதித்து அன்பு கூர்ந்து அக மகிழ்கின்றேன்.
உம்மை நான் நினைக்கின்றேன் என்றால் அது எவ்வளவு மகிமை!!
இறைவா, வானத்தையும் பூமியையும் உண்டாக்கின என் தேவன்
நீர் என்னோடு கூடவே இருக்கின்றீர்! நீர் வாழ்க வாழ்கவென்பேன்.
உம் நாமம் என்றென்றும் போற்றப்படுவதாக. ஆமென்.
இயேசப்பா, என்னை உமக்கு அர்ப்பணிக்கின்றேன்.
நீரே என் ஜெபங்களுக்கு பதிலைத் தர வல்லவர்.
என் இதயத்தை உமக்கே ஒப்புக்கொடுத்தேன்.
என்னோடு உள்ளோர் இவ்வுலகத்தின் போக்கிலே போகும்போது
என்னை மாத்திரம் கர்த்தர் நீர் உம் [illegible] காத்துக்கொண்டீர்
உமக்கே எல்லா நன்றிகளையும் ஏறெடுக்கின்றேன். ஆமென்.
நல்லவரே என் நண்பரே, என் பெலனும் கேடகமுமானவரே வாழ்க.
உம்முடைய நாமத்தில் உலகெங்கிலும் விடுதலை கிடைக்கிறது.
வியாதிகள் நீங்குகின்றன. பேய்கள் ஓடுகின்றன.
குருடர்கள் பார்வையடைகின்றனர். முடவர்கள் நடக்கின்றனர்.
தரித்திரர்களுக்கு சுவிசேஷம் அறிவிக்கப்படுகிறது.
பூமியின் எல்லையெங்கிலும் உம்முடைய வசனங்கள் அறிவிக்கப்படுகிறது.
இதோ என் தேவனே பூமியனைத்தும் உம் மகிமையால் நிறைந்திருக்கிறது.
இராஜாதி இராஜனே, தேவாதி தேவனே நீர் வாழ்கவென வாழ்த்துகிறேன்
அன்பே உருவான என் அநாதி தேவனே நீர் போற்றப்படுவீராக.
உம்முடைய கிருபை இப்புவி மாந்தர்கள் மேல் இருப்பதற்காக நன்றி.
இந்த கத்தார் தேசம் முழுவதும் உம்முடைய நாமமாக மாற்றுவதற்காக நன்றி.
நான் வாழும் தேசம் முழுவதும் உமக்கே சொந்தமாகனும்.
ஆண்டவா வல்லமையோடு வருவீர். இவ்வுலகை ஆட்சிப்பீர்.
துதி, கன மகிமை யாவும் உமக்கே சொந்தமாவதாக. ஆமென்.

23-09-09
6:05 A.M

என் உயிருள்ள இயேசு கிறிஸ்துவே, உமக்கு என் காலை நேர ஸ்தோத்திர பலிகள்!!
உம்முடைய எல்லா நன்மை, கிருபைகளுக்காக உமக்கு நன்றி சொல்லுகிறேன்.
இராஜாதி இராஜா, தேவாதி தேவா என் அருமை இரட்சகரே நீர் வாழ்க.
உம் தூய வழிகளுக்காக உமக்கு ஆயிரம் ஸ்தோத்திர பலிகளை ஏறெடுக்கின்றேன்.
உம்முடைய பாதையெல்லாம் நெய்யாய் பொழிவதற்காக ஸ்தோத்திரம்.
உம்முடைய அதிசயமான காரியங்களுக்காக எந்நாளும் ஸ்தோத்திரம்.
எங்கள் பாவங்களையெல்லாம் சிலுவையில் சுமந்து தீர்த்தீரே ஸ்தோத்திரம்.
சர்வ வல்லவரின் வலது பாரிசத்தில் வீற்றிருப்பவரே உமக்கே ஸ்தோத்திரம்.
பரிசுத்த ஆவியானவரே, சத்திய ஆவியானவரே உமக்கே நன்றியும், ஸ்தோத்திரமும்.
என் உத்தம நேசரே, என் ஜீவனின் அதிபதியே நீர் வாழ்க.
உம்முடைய எண்ணிலடங்கா நன்மை, கிருபைகளுக்காக ஸ்தோத்திரம்
என் பாத்திரத்தை நிரம்பி வழியச் செய்தமைக்காக ஸ்தோத்திரம்.
என்னோடு கூடவே எந்நாளும் நீர் இருப்பதற்காக ஸ்தோத்திரம்.
உம்முடைய அக்கினியால் என்னை புடமிட்டு பரிசுத்தம் செய்தீரே உமக்கு நன்றி.
ஆவேறாய் பெரிய அதிசயங்களை செய்பவரே நீர் வாழ்க வாழ்க
தீமைகளை என்னில் அணுகாமலிருக்கச் செய்தீர் ஸ்தோத்திரம்.
சேனைகளின் கர்த்தர் நீர் பரிசுத்தர் பரிசுத்தர் பரிசுத்தர் ஸ்தோத்திரம்.
பூமியனைத்தும் உம் மகிமையால் நிறைந்திருப்பதற்காக ஸ்தோத்திரம்.
சாத்தானை ஜெயித்து எங்களுக்கு ஜெயத்தை அருளினீரே ஸ்தோத்திரம்.
உம்முடைய ஒப்பற்ற பிரசன்னத்திற்காக ஸ்தோத்திரம்.
உம்முடைய காருணியமென்னும் கிருபைக்காக ஸ்தோத்திரம்.
தேவனுடைய வார்த்தையாக இருப்பவரே உமக்கு ஸ்தோத்திரம்.
துதியும், கனமும், மகிமைக்கும் நீரொருவரே பாத்திரர் ஸ்தோத்திரம்.
நானே வழியும், சத்தியமும், ஜீவனுமென்றவரே உமக்கே ஸ்தோத்திரம்.
விடிவெள்ளி நட்சத்திரமே, என் சர்வ வல்லவரே நீர் வாழ்க.
மெய்யான திராட்சை செடியே உம் நாமம் போற்றப்படுவதாக.
உம்முடைய வல்லமையான வார்த்தைகளுக்காக ஸ்தோத்திரம்.
ஆலோசனையின் தேவனே, ஆறுதலின் நாயகனே உமக்கே ஸ்தோத்திரம்
மாசற்ற உம்முடைய போதகத்திற்காக ஸ்தோத்திரம். ஆமென்
எங்களுக்காக பிதாவினிடத்தில் விண்ணப்பம் செய்பவரே உமக்கே ஸ்தோத்திரம்
என் இருதயத்தில் அன்பை, மகிழ்ச்சியை, பொறுமையை தந்தமைக்காக ஸ்தோத்திரம்
என் இருதயத்தில் தயவை, சாந்தத்தை, சந்தோஷத்தை வைத்தமைக்காக ஸ்தோத்திரம்
பொறுமையோடு இன்றும் காத்திரு என்று சொன்னீரே உமக்கே ஸ்தோத்திரம்
என்னை நீர் ஏற்கின்ற பாத்திரமாக மாற்றி வருவதற்காக ஸ்தோத்திரம்
ஆசீர்வாதங்களை முன்மாரி, பின்மாரியாக பொழிபவரே உமக்கு ஸ்தோத்திரம்
சேனைகளின் இராஜாவே அல்லேலூயா. ஆராதனை உமக்கே! ஆமென்.

24-09-09

இராஜாதி இராஜனாம் என் தேவன் உமக்கே என் ஆராதனை.
செங்கடலை இரண்டாக பிளந்தவரே உமக்கு ஸ்தோத்திரம்.
அன்பே உருவான என் அதிசய தேவன் உமக்கே நன்றிகள்.
யூதாவின் கோட்டை என் சேனைகளின் கர்த்தர் பரிசுத்தர், பரிசுத்தர், பரிசுத்தர்
என் அடைக்கலம், என் வாஞ்சையுமானவர் நீர் மாத்திரம் தானே!!
என் பெலனும், என் அரணும் நீர் மாத்திரம் இயேசையா!!
என் துதியும், என் ஸ்தோத்திரம் உமக்கொடுக்கத்தானே ஐயா
என்னை நீர் எந்நாளும் கைவிடவில்லை. தாங்கி நிறுத்துகிறீர்
என்னை விட்டு நீர் விலகிப் போவதுமில்லை. ஆமென்.
உம்மை நான் நன்றியோடு துதித்து ஸ்தோத்திரம் செய்கின்றேன்.
என் இராஜாதி இராஜனாம் நீர் எல்லாரிலும் பெரியவர்
ஜயாதி ஜயவர் நீரே சர்வ லோகத்திற்கும் வல்லவர்.
உம்மில் நான் என்றும் மகிழ்ந்திருக்கின்றேன்.
எனக்காக நீர் சத்துருவை ஜெயித்தீர். வாழ்க அல்லேலூயா
எனக்காக உம்முடைய ஜீவனையும் ஒப்புக்கொடுத்தீர்.
என் பாவங்களை நீர் எண்ணிப்பார்க்காது இருந்தீர்.
என் மீறுதல்களை மன்னித்து என்னை மீண்டும் மீண்டுமாய் பரிசுத்தமாக்கினீர்.
தினமும் என்னை உம் அக்கினியால் புடமிட்டு ஜொலிக்கச் செய்கின்றீர்
உமக்காக கனிதரும் செடியாக என்னை வளர்த்து வருகிறீர் ஸ்தோத்திரம்.
என் துதியின் மேல் நீர் அநாதி பிரியம் கொண்டிருக்கின்றீர் நன்றி.
என்னை உம் பரிசுத்த ஆவியால் பெருக்கமாய் நிறைக்கின்றீர் நன்றி.
உம்முடைய சத்திய வசனங்களை என் நாவில் நீர் வைக்கின்றீர்
நான் உம்மையே நாள்தோறும் தேட வைத்தீர் ஸ்தோத்திரம்.
எல்லாவற்றையும் குப்பையென உதறிவிட வைத்தீர் ஸ்தோத்திரம்.
என்னுடைய மீறுதல்களை நீர் மன்னித்து மறந்தும் போனீர் ஸ்தோத்திரம்
உம்முடைய பரிசுத்த அக்கினியானவருக்கு ஸ்தோத்திரம்.
நன்றி பலிகள் மேல் பிரியமாய் நீர் இருக்கின்றீர் ஸ்தோத்திரம்.
திட அஸ்திபார மூலைக்கல்லே உமக்கு கோடான கோடி ஸ்தோத்திரம்.
ஆராதனைக்குரியவர், உம் அதிசயத்திற்காக ஸ்தோத்திரம்
பயத்தோடும், நடுக்கத்தோடும் உம் சமூகத்திற்கு வர கிருபை தந்தீர்.
என் ஆத்தும நேசர் நீரொருவரே உம் நாமமே பரிசுத்த அதிகம் ஆமென்.
நித்திய சிருஷ்டிகரே. எங்கள் இரட்சகரே, எங்கள் தேவ வல்லமையானவரே
உம்மை நான் எப்பொழுதும் நினைத்திருக்க கிருபை செய்யுங்க.
உம்முடைய வசனத்தின் மேல் வாஞ்சையாயிருக்க உதவி செய்திடுங்க.
நாளும் என் [illegible] கர்த்தரையே ஸ்தோத்தரிப்போம்.
ஆயிரம் தலைமுறைகளும் நீர் நன்மை செய்கின்றீர். ஆமென்.

25-09-09

மாம்சத்தில் பலவீனப்பட்டு கிடக்கின்ற என்னை கண்ணோக்கிடும்.
எனக்கு ஏற்படும் திடீர் உபத்திரவங்களை என்னைவிட்டு அகற்றிடும்.
இறைவா என்னை ஒன்றுமே பிடிக்கவில்லை. உம்மை மாத்திரம் பிடிக்கின்றது.
உம்மிடத்தில் எனக்கு எந்நாளும் மகிழ்ச்சியுண்டு. நீரே மகிழ்ப்பண்ணுகிறீர்.
இராஜாதி இராஜனே என் தேவனே என் பாவங்களை மாற்றிப்போடும்
பெலவீனத்தை களைந்து, பரிசுத்தரின் பெலனை பெற்றுக்கொள்ள வேண்டும்
ஆராதனைக்குரியவர் நீரே, உம்மை நான் மிகவும் நேசிக்கின்றேன்.
உம்மிலே எனக்கு எந்நாளும் சந்தோஷம். மகிழ்ச்சியும் உண்டு.
என் பாவங்களை என்னைவிட்டு அகற்றி என்னை பரிசுத்தப்படுத்திடும்
நான் உம்மை நேசிக்கின்றேன். அன்புடன் நேசிக்கின்றேன்.
உம்முடைய சமுகத்தில் சிம்மாசனத்தின் படிகளில் நிற்கின்றேன்.
நானும் என் வீட்டாரும் உம்மையே ஸ்தோத்தரித்து ஆராதிப்போம்.
இறைவா என் தேசம் இரட்சிக்கப்பட வேண்டும். என் ஜனங்கள்
உம்மண்டையில் சேர வேண்டும். நீர் வழி செய்ய வேண்டும்.
என் மக்கள் எல்லைவிட்டு வெளியேறி காணாமல் போக வேண்டும்.
கர்த்தரே உம் கிருபையால் நான் நன்மைகளை சுதந்தரித்துக்கொள்ள வேண்டும்
எல்லா மகிமைக்கும் பாத்திரர் நீரொருவர் தானே வாழ்க வாழ்க.
உம்மை நான் போற்றித் துதித்துப்பாடி மகிமைப்படுத்துவேன்.
இராஜாதி இராஜா, தேவாதி தேவா நீர் வாழ்க வாழ்க
உம் தூய உள்ளம் எனக்கு வேண்டும். உம் அன்பும் எனக்கு வேண்டும்
இராஜனே என் பெலனும் கிருபையானவரே என் உடலை தூய்மையாக்கும்
என் உடல் உறுப்புகளை தூய்மையாக்கும். நன்மை செய்யும்.
நான் உமக்காக மகிழ்ந்து பிரகாசிக்க கிருபை செய்யும்.
என்னில் இருக்கும் பயத்தின் ஆவியானது என்னைவிட்டு நீங்குவதாக.
நான் உம்மை பயத்தோடும், நடுக்கத்தோடும் தொழுதுகொள்வேனாக.
அன்பரே என் அருமை தேவனே நீர் மெய்யான தெய்வம்
உம்மை நான் மெய்யாகவே நேசித்து உம்மை அன்பு கூருகிறேன்.
இறைவா உமது ஆவியை என்மேல் பொழிந்தருள வேண்டும்.
உம்முடைய வல்லமையை என்மேல் பொழிந்தருள வேண்டும்.
நான் நித்திய ஜீவனை ஊழியக்காரனாக பயன்பட வேண்டும்.
உமக்காக பெரிய காரியங்களை செய்ய வேண்டும்.
பூமியிலும், பாதாளத்திலும் செய்யப்படாத காரியம் பரிசுத்தமான காரியம்
நான் உமக்காக செய்ய வேண்டும். உம்மை மகிமை செய்ய வேண்டும்
அற்புதரே, என் அதிசயரே உம்முடைய இரட்சிப்பின் வல்லமையை
முழுமையாக நான் புரிந்துகொள்ள வேண்டும்.
உம்மை நான் என் முழுமனதோடு ஆராதிப்பேன். ஆமென்.

26-09-09

என் தேவனாம் நீரொருவரே எந்நாளும் பெரியவராக இருக்கின்றீர்.
உம்முடைய ஒப்பற்ற ஈவுக்காக உம்மை நான் ஸ்தோத்தரிக்கின்றேன்.
அப்பா பிதாவே என்னை மிகவும் நேசிக்கின்ற அல்ஃபாவும், ஓமேகாவே..
உம்மிடத்தில் நான் சேர வேண்டும். உம்மையே அடைக்கலமாக்கிட வேண்டும்.
நீரே என் இருதயத்தில் வந்து என்றென்றும் தங்கிடும்.
இயேசுவானவரைப் போல பரிசுத்தமானவனாக என்னையும் மாற்றிடும்.
நன்றி பலிகளை உமக்கு நேராக செலுத்தி உம்மை மகிமைப்படுத்திடுவேன்.
என்னை ஜீவபலியாக மாற்றி உமக்கு அன்பை படைத்திடுவேன்.
என் தேவன் நீர். என் அத்தும மணவாளர் நீர். நீரே வாழ்க.
உம் நாமம் என்றென்றும் பரிசுத்தமானதாக இருக்கின்றதே!
உம் தூய வசனங்களுக்காக உம்மை நான் உயர்த்துகிறேன்.
ராஜா உம் மரணம் போதுமைய்யா. உம் வழியே எனக்கு வேண்டுமைய்யா.
கருணையின் பிதாவே என் கல்வாரி நாதனே நீர் வாழ்க.
உம் அன்பே எனக்கு போதுமானது. நீரே எனக்கு ஆதாரம்.
உம் வசனமே எனக்கு போதனை. சத்தியமே என் வாக்கை.
பரலோக வழியில் நடத்தலே என் வாழ்வின் நோக்கம்.
உம்மிடத்தில் சேருவதே என் வாழ்வின் பாக்கியம்.
நான் நிர்வாணியாகவே இவ்வுலகில் பிறந்தேன்.
நிர்வாணியாகவே வாழ்ந்துக் கொண்டிருக்கிறேன்.
நிர்வாணத்தோடே மரித்துப் போகவும் போகிறேன்.
ஆண்டவரே என் அன்பே உன்னான நல்ல மேய்ப்பரே நீர் வாழ்க.
உம் நாமம் என்றென்றும் உயர்த்தப்படுவதாக. நின் தூய வாழ்வை நாளும் கொள்வேனாக
சத்திய தேவனே, சர்வலோகாதிபதியானவரே நீர் வாழ்க வாழ்க.
உம்மை நான் அறியணும், உம்மிடம் நான் சேரணும்.
உம்மை நான் காண வேண்டும். உம்மில் பிரியமானவனாக வேண்டும்.
உமக்கு பிரியமானவனாக வேண்டும். உம்மை நேசிக்க வேண்டும்.
மெய்த் தேவனே உம் ஒப்பற்ற அன்பை இப்புவியில் பறைசாற்ற வேண்டும்.
நல்லவரே நன்மைகளை செய்பவரே நீர் வாழ்க வாழ்க.
என் கண்ணின் இமைகள் என் கண்ணை விட்டு நீங்கிப் போவதாக.
என் தெய்வமே, என் பரிகாரியே உம்மை நான் நேசிக்கின்றேன்.
எப்பொழுதும் உம்மைப்பிரிந்தால் என் மனம் வாடிப் போகும்.
உம் நல்ல தயவிற்காக உமக்கு நன்றி செலுத்துகின்றேன்
உம் தூய பரிசுத்த வார்த்தை எனக்கும் தந்ததற்காக நன்றி செலுத்துகிறேன்
சுகமானவரே, அகிலத்தை வெல்பவரே நீர் வாழ்க வாழ்கவென வாழ்த்துகிறேன்
ஆண்டவரே, என் அன்பே உன்னான அத்தும நேசரே
உம்மை நான் துதித்து, கனப்படுத்தி, ஸ்தோத்தரிக்கின்றேன். ஆமென்.

28-09-09

எல்லா துதி, கன, மகிமைக்கும் பாத்திரர் நிறைவானவர் தானே அல்லேலூயா!
இறைவா உம்மை நான் அன்பு செய்கிறேன். ஆசீர்வதிக்கிறேன். நீர் வாழ்க.
இறைவா உம்முடைய சத்தியத்தினை தாங்கி சுமக்கும் மகனாக என்னை மாற்றும்.
இனி நான் அல்ல என்னில் கிறிஸ்துவும், அவரது சத்தியங்களே நிலைக்க செய்யும்.
என் உதடுகள் உம்முடைய திருவசனங்களையே உச்சரிப்பதாக.
என் வாய் அவருடைய சத்தியத்தின் வல்லமையாக, சத்தமாக இருப்பதாக.
என் நாவு வார்த்தைகளின் பரிசுத்த பட்டயமாக மாறிவிடட்டும்.
என் இருதயம் இயேசுவையே தியானித்து அவரின் பற்றுதலாயிருக்க வேண்டும்
என் சிந்தனைகள் அவருடைய வசனங்களையே சிந்தித்துக்கொண்டிருக்க வேண்டும்
என் நினைவுகள் அவருடைய வல்லமையை விசுவாசித்துக்கொண்டிருக்க வேண்டும்.
என் செவிகள் எப்பொழுதும் தேவ வசனத்தை கேட்க கூடியதாக வேண்டும்.
என் கண்கள் எந்நேரமும் பரிசுத்தமானதையே தரிசித்து இச்சைகளுக்கு விலகியிருப்பதாக.'
என் நாசி கர்த்தரின் மகிமைக்காக எதிர்நோக்கி காத்திருக்கட்டும்.
என் கரங்கள் கர்த்தரின் சத்திய வேதத்தை சுமக்கும் பாக்கியம் பெற வேண்டும்,
என் கால்கள் சத்திய சுவிசேஷத்தை அறிவிக்க செயல்பட வேண்டும்.
என் தலையெல்லாம் உம்முடைய அபிஷேகத்தால் நிறைந்து வழிய வேண்டும்.
என் கண்கள் யாவும் ஒளிபோலாகி ஜெயிக்கவும், ஜொலிக்கவும் வேண்டும்.
என்னுடையது யாவும் உம்முடைய சத்தியத்தின் பாதையில் பாக்கியம் பெற வேண்டும்
இராஜாதி இராஜா, தேவாதி தேவா உம் நாமம் மகிமைப்படுத்தப்பட வேண்டும்.
இயேசுவே உம்மை எல்லோருக்கும் சொல்ல வேண்டும்.
உம் அன்பை இவ்வுலகிற்கு எடுத்து சென்று பகிர்ந்துகொள்ள வேண்டும்.
என் அன்பே உறவான, என் ஜீவப்பமே என் இயேசையா!!!
உம் நாமம் வாழ்க வாழ்கவென வாழ்த்தி மகிழ்கின்றேன்.
அநாதி சிநேகத்தால் என்னை இரட்சித்தீர், காருண்யத்தால் காத்துக்கொண்டீர்.
நீர் பெரியவர், சர்வத்திற்கும் மேலான துதிகளுக்கு பாத்திரர்.
தேவ குமாரன், இயேசுவே உம் இரத்தம் ஜெயம். இரத்தம் ஜெயம்
நாள்தோறும் என்னை உம் வல்லமையால் நிரப்புகின்றீர்.
தினமும் என்னை உம் அக்கினிமதிலினால் சூழ்ந்து காப்பாற்றுகின்றீர்.
நீரே என் பெலனும், என் அடைக்கலமானவர் ஸ்தோத்திரம்.
சர்வ சிருஷ்டிக்கும் மேலானவர் நிறைவானவரே வாழ்க. வாழ்க.
இந்த ஏழையை கண்ணோக்கி பாருமையா. என் இயேசையா!
சுவிசேஷத்தின் பாதையில் எல்லா தடைகளையும் நீக்கிப் போடுங்க.
வல்லமையை தாருங்க. வரங்களை தாருங்க.
உமக்காக எழும்பி நான் பிரகாசிக்க வேண்டும்.
பூமியின் எல்லையெங்கிலும் உமக்கு சாட்சியாக நான் ஜீவிக்க வேண்டும்
உம் நாமம் போற்றப்படுவதாக. உயர்த்தப்படுவதாக. ஆமென்.

29-09-09

இறைவா நான் ஆயிரம் மணித்துளியும் அந்நிய பாஷையில் பேசினாலும்
அன்பு எனக்கில்லாவிட்டால் நான் ஒன்றுமல்லவே!!
இராஜா என் இருதயத்தில் உம்முடைய அன்பு வருவதாக!
பிதாவின் அன்பு என் உள்ளத்தில் புது ஜீவனைப் பெற்றுக்கொள்வதாக.
அன்புள்ளம் படைத்த என் நேசருக்கு ஆயிரம் ஸ்தோத்திரங்கள்.
என்னை எந்நாளும் நேசிக்கிற பிதாவே நீர் வாழ்க.
உம்முடைய சமூகத்தில் நான் காத்திருப்பது எவ்வளவு பாக்கியம்!!.
உம்முடைய பிரசன்னத்தில் மகிழ்ந்திருப்பது எவ்வளவோ கிருபை.
ஆண்டவரே என் அன்பே உருவான கிருபையுள்ளம் கொண்டவரே
நீர் வாழ்க. உம்முடைய அன்பை நான் மிகவும் நேசிக்கின்றேன்.
உம்முடைய வல்லமையை நான் நாள்தோறும் வியக்கின்றேன்.
உம்முடைய வார்த்தையாலே வானத்தை விரித்தீர்.
அதில் இரண்டு சுடர்களை வைத்து நாட்களை ஆளச்செய்தீர்.
எல்லா ஜீவனையும் நீரே சிருஷ்டித்தீர் அவை சிறந்தது என கண்டீர்
உம்முடைய ஒப்பற்ற கிருபைக்காக உமக்கு நன்றி சொல்லுகிறேன்
உம்முடைய மாறாத நீதியும், கிருபைக்காகவும் ஸ்தோத்திரம்.
ஆராதனைக்குரியவரே நீரொருவரே நீர் மாத்திரம் எனக்கு போதும்.
உம்மையல்லாமல் எனக்கு வேறே தெய்வம் இவ்வுலகில் இல்லை.
ராஜாதி இராஜா, தேவாதி தேவா உம் அன்பே பிரதானம்.
இறைவா உங்க ஊழியம் சிறப்பாக நான் தொடரணும்.
சுவிசேஷம் சொல்லப்படும் இடங்களிலெல்லாம் அற்புதம் நிகழ வேண்டும்.
கட்டுண்டவர்கள் விடுவிக்கப்பட வேண்டும். திக்கற்றோர் ஜெபம் கேட்கவேண்டும்
வியாதியஸ்தர் சுகமாக்கப்பட வேண்டும். சாபங்கள் முறிக்க வேண்டும்.
தீர்க்கதரிசனங்கள் உரைக்கப்பட வேண்டும்.
பிசாசுகள் துரத்தப்பட வேண்டும். சத்தியத்தை சிறப்பாக சொல்ல வேண்டும்.
அன்பே உருவான என் அழகான இயேசு கிறிஸ்துவே
உம்மை நான் பெற்றுக்கொண்டேன். உம்மை அறியாதவரும் உம்மை அறியணும்
உம்மை நான் இவ்வுலகில் எல்லோருக்கும் கொடுக்க வேண்டும்
பரிசுத்தமாக உம்மோடு நடக்க நான் பழகணும்.
தினமும் உம்முடைய பரிசுத்த இரத்தத்தினால் கழுவப்பட வேண்டும்.
நானும் என் வீட்டாரும் உம்மையே சேவிக்க வேண்டும்.
என்மேல் இருக்கிற அபிஷேகம் என் தலைமுறை தலைமுறைக்கும்
அருளப்பட வேண்டும். இதுவே என் வேண்டுதல்.
ஆண்டவரே உம்மை என் நினைவுகள் மறந்து போகக் கூடாது.
உம்மை ஆராதிக்கிற கூட்டமாக வளர்ந்து பெருகணும்.
ஐயரே என் துதியால் மகிழ்வோனே நீர் வாழ்க. ஆமென்.

Petitions from the Pit



கடவுளின் ஒருமை—பிதா, மகன்,
பரிசுத்த ஆவி—இருளின் குழியிலும்
ஒளியின் கைகளை நீட்டி,
அழைக்கின்றனர்